Registered No. M 5068.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ ஆவணிமீ 1௳ 16—8—1948 ஹிஜ்ரி 1367 ஷவால்மீ 10௳ திங்கட்கிழமை. } இதழ் 29

## இன்றைய சிக்கலான அரசியல் அறிவுக்கு

## 'ஆஸாத்' என் அவசியம்?

★

பாகிஸ்தானின் உண்மையான சொரூபத்தை தீட்டிக்காட்டுவது 'ஆஸாத்'

வெள்ளை ஏஜெண்டுகளான லீக் லீடர்களை உங்களுக்கு
அறிமுகப்படுத்துவது 'ஆஸாத்'

அவர்களுடைய வேற்றுமைப் பிரசாரத்தின் உதிரக்கடலில் மறைந்துவிட்ட
ஒற்றுமை முத்துக்களைக் கண்டெடுப்பது 'ஆஸாத்'

பாகிஸ்தானுக்கு ஓடி பரதவிப்போரின் துன்பங்களை சித்தரித்துக்காட்டி
இந்தியாவில் இன்பமுடன் வாழச்செய்வது 'ஆஸாத்'

அமைதி, சமாதானம், சகோதரத்துவம், முன்னேற்றத்துக்கு அவசியமான
அறிவை ஊட்டுவது 'ஆஸாத்'

முஸ்லிம்களை தவறான வழியிலிருந்து தடுத்து இஸ்லாமுக்கு உகந்த வகையில்
காங்கிரஸோடு இணைப்பது 'ஆஸாத்'

வெள்ளையர்களின் பொய்யான சரித்திரக்கூற்றுகளை அம்பலப்படுத்தி
இந்தியாவின் உண்மையான உன்னத சரித்திரத்தை விளக்குவது 'ஆஸாத்'

லீக் நடவடிக்கைகளால் ஏற்பட்டுவிட்ட வெறுப்பை போக்கி
நல்லுணர்ச்சியை ஏற்படுத்துவது 'ஆஸாத்'

நடந்தேறிய கலகங்களுக்கெல்லாம் ஒரு சில லீக் லீடர்களே காரணமென்பதை
எடுத்துக்காட்டி நிரபராதிகளான முஸ்லிம்களை நிரபராதிகள் என்று
நிரூபித்துக் காட்டுவது 'ஆஸாத்'

சுதந்திர இந்தியாவில் சுபிட்ச இந்தியாவை உருவாக்க
இந்தியர்களைத் தட்டி எழுப்புவது 'ஆஸாத்'

குறை எங்கிருப்பினும் தயவு தாட்சண்யமின்றி கண்டிப்பது 'ஆஸாத்'

விவசாயிகள், தொழிலாளிகள், பாட்டாளிகளின் ஆட்சியை
லட்சியமாகக் கொண்டிருப்பது 'ஆஸாத்'

வகுப்புவாத இருட்டறையில் சமதர்ம தீபத்தை ஏற்றிவைப்பது 'ஆஸாத்'

தேசிய, சர்வதேசிய அரசியலை அலசி அரசியல் அறிவை துலக்குவது 'ஆஸாத்'

# — எல்லைப்புரத்தின் அவசியம். —

—( அபுல்கலாம் ஆஜாத், தஞ்சை. )—

ஒரு நாட்டின் எந்த ஒரு பாகமானது மற்றொரு நாட்டின் பாகத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றதோ அந்த குறிப்பிட்டபாகத்திற்கு எல்லைப்புரம் என்றும் நாட்டின் எல்லை என்று அழைக்கின்றோம்.

எல்லைப்புரம் என்பது ஒரு நாடோ அல்லது அல்லது ஒரு உபகண்டமோ அல்ல. அவைகள் இயற்கையாகவே ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்பட்டுவிடுகின்றன. எல்லைப்புரம் ஒவ்வொரு நாட்டிற்கும் மிகவும் இன்றியமையாததாக இருப்பதோடு அந்த எல்லைப்புரபிரதேசங்களை அந்தந்த நாடுகள் மிக சிரத்தையோடும் மிக கவனத்தோடும் பாதுகாக்கவேண்டிய அவசியமும் அந்நாட்டு அரசாங்கங்களுககு ஏற்பட்டுவிடுகின்றது. இல்லையேல் அந்நிய தேசம் அல்லது தேசங்கள்மீது படையெடுத்து நாட்டை அபகரித்துக்கொள்ளத்தான் செய்யும் என்பதற்கு நம் தேசசரித்திரமே போதிய சான்றாகும்.

இந்திய சரித்திரத்தில் நாம் காண்பது என்ன? வடமேற்கு எல்லைப்புரத்தில் உள்ள கைபர், போலன் கணவாய்களின் வழியாக அந்நிய நாடுகள் இந்தியாவின் மீது படையெடுத்து சிந்து, பஞ்சாப் பிரதேசங்களை தங்கள் நாட்டுடன் சேர்த்துக்கொண்டதையும், ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவில் வந்து குடியேறியதையும், மேலும் முகம்மதிய அரசர்களான கோரி முஹம்மது, கஜினி மஹ்மூது ஆகியோர் படையெடுத்ததையும் நாம் காண்கின்றோம். இவைகளுக்கெல்லாம் காரணம் இந்திய எல்லைப்புரம் சரிவர பாதுகாக்கப்படாததேயாகும். இவைகளைத் தவிர மங்கோலியர்கள், ஹூணர்கள் போன்ற வகுப்பார் இந்தியாமீது படையெடுத்து மக்களை அழித்ததையும் நாம் சரித்திரத்தில் காண்கிறோம்.

தென்னாட்டிற்கு பண்டைய காலத்தில் விந்திய மலையும் அதை சார்ந்த பாகங்களும் எல்லையாக விளங்கின. அந்த எல்லைப்பிரதேசத்தை மிக்கபலம் வாய்ந்த ஹர்ஷ சக்ரவர்த்தியால் கூட தாண்ட முடியாதபடி அவ்வளவு பலமுள்ளதாக பல்லவ அரசர்கள் வைத்திருந்தார்கள் என்பதையும் அறிவோம். இவ்வாறு நமக்கு இந்திய சரித்திரத்திலும் மற்ற எந்த தேச சரித்திரங்களிலும் ஆதாரங்கள் அனேகம் நமக்குக் கிடைக்கின்றன. இவைகளை நாம் சரித்திரம் பூர்வமாக அறிந்துகொள்கிறோம்.

பிரிக்கப்படாத ஐக்கிய இந்தியாவுக்கு வடமேற்கு எல்லைபுரமாகாணம்-பெஷாவரை தலைநகராகக் கொண்டது-பிரிட்டிஷாரால் உண்டாக்கப்பட்டு மிக கவனத்தோடு பாதுகாக்கப்பட்டுவந்தது அம்மை அம்மாகாணத்தின் ஜனத்தொகை மிகக் குறைவாகவும், வரும்படி அதிகமில்லாமல் இருந்தபோதிலும் பிரிட்டிஷ் அரசாங்கம் படைகளை அங்கு நிறுத்தி அம்மாகாணத்தின் வருவாயை விட எவ்வளவோ அதிகமாக செலவும் செய்து வந்தது.

ஆனால் இன்று பிரிக்கப்பட்ட நம் இந்தியாவுக்கு காஷ்மீர்தான் எல்லைப்புரம். வடமேற்கு எல்லைப்புரமாகாணம் இன்று பாகிஸ்தான் தேசத்திற்கு எல்லைப்புரமாக அமைந்துவிட்டது. ஆகவே நம் நாட்டின் எல்லைப்புரம் காஷ்மீர்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது காஷ்மீர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள ஓர் மலைப்பாங்கான எழில் மிகுந்த பிரதேசமாகும் மேலும் காஷ்மீரையொட்டி ஆப்கனிஸ்தான், ரஷியா, திபேத், சைனா நாடுகள் இருக்கின்றன. ஆகவே இந்த அன்னிய நாடுகளின் படையெடுப்பிலிருந்தும் ஆக்ரமிப்பிலிருந்தும் நம் இந்தியாவை காக்க வேண்டுமென்றால் காஷ்மீர் நமது எல்லைப்புரமாக அமையவேண்டும். இன்றேல் படையெடுப்பிலிருந்து இந்தியாவை காக்க முடியாது. காஷ்மீர் நம் நாட்டின் எல்லைப்புரமாக அமைக்கப்பட்டால் கீழபஞ்சாபும் ஐக்கியமாகாணத்தின் ஒரு பகுதியுமே இந்தியாவின் எல்லைப்புரமாக அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்படும் மேலும் இந்தியாவின் தலைநகர் "டில்லி' எல்லை புரத்தில் அமைந்தால் அதைவிட அபாயகரமானதும், மோசமானதுமான நிலைமை வேறு என்ன இந்தியாவுக்கு வேண்டும்

" இதையெல்லாம் உத்தேசித்துத்தான் நாம் (இந்தியா கவர்ன்மெண்ட்) காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்ததை ஆதரித்து அந்த எல்லைப்புரமாகாணமான காஷ்மீர் மீது படையெடுத்து வந்த பிடாரிகளையும் அவர்களுக்கு ஆதரவு கொடுத்து காஷ்மீரை தன் வயப்படுத்திக்கொள்ளலாமென்று கனவு காணும் பாகிஸ்தான் பிசாசுகளையும் இந்தியத்துருப்புக்கள் விரட்டியடித்து வீடு,வாசல், மானம் இவைகளை இழந்த காஷ்மீர் ஏழை விவசாயிகளைக் காப்பாற்றி வருகின்றது. ஷேக் முகம்மது அப்துல்லாவுடன் இந்திய சர்க்கார் மனப்பூர்வமாக ஒத்துழைக்கிறது. காஷ்மீர் பாகிஸ்தானுடன் ஒருக்காலும் சேர முடியாது. முஸ்லிம்களை காக்கவே நாங்கள் அவதரித்திருக்கிறோம் என்று வாய்கிழிய கத்திய பாகிஸ்தான் லீடர்

# —“ தீரர் ஷெர்வானி ”—

[நாகை V. E. M. ஹமீது யூசுபுவத்தனி]

ஷெர்வானி காஷ்மீர் தேசிய மஹாநாட்டின் இளம் தலைவர்களில் ஒருவர். அவரின் முழுப்பெயர் மீர்மக்பூல் ஷெர்வானி. வயது முப்பது. காஷ்மீரிலுள்ள பாராமுலா நகரை மலைஜாதிக் கொள்ளைக் கூட்டத்தினர் ஆக்ரமித்துக்கொண்டிருந்தபோது அவர் அங்கிருந்து கொண்டு இரவு நேரங்களில் ஒருவருக்கும் தெரியாமல் மோட்டார் சைக்கிலில் அடிக்கடி ஸ்ரீநகர் வருவதும் பாராமுலா நிலைமையை தெரிவித்துப் போவதும் உண்டு இந்தியப்படைகளுக்கு அது பேருதவியாக இருந்தது. ஒருநாள் “மலைஜாதியினர் பாராமுலாவில் எதிர்த்து தாக்கக்கூடிய நிலைமையில் இல்லை. ஆகையால் இந்தியத்துருப்புக்கள் தாக்கினால் ஆக்ரமிப்பாளர்களை பாராமுலாவிலிருந்து விரட்டி விடுவது சுலபம்” என்று சொல்லிவிட்டுத் திரும்பி இரவு நேரத்தில் பாராமுலாவுக்குள் போய்க்கொண்டிருந்த சமயம் அவர் தேசிய மஹாநாட்டின் முக்கியஸ்தர்களில் ஒருவர் என்பதை அறிந்து மலைஜாதியினர் அவரைப்பிடித்துக்கொண்டு போய்விட்டனர். முச்சந்தி ஒன்றில் கட்டிப்போட்டு, அடித்து, தேசிய மஹாநாட்டையும் ஷேக்அப்துல்லாவையும் மறுதளிக்குமாறு நிர்ப்பந்தித்தனர். அத்துடன் பொம்மை சர்க்காரான சுதந்திரக் காஷ்மீர் சர்க்காரிடம் விஸ்வாசம் தெரிவிக்குமாறு வற்புறுத்தினர். கடைசிவரை அத்தீரர் தன்னுடைய தேசீய இயக்கத்தையும், மதிப்புக்குரிய தலைவராகிய காஷ்மீர் சிங்கம் ஷேக்அப்துல்லாவையும் நிராகரிக்க மறுத்து விட்டதுடன் “இந்தியத் துருப்புக்கள் தேசீய மஹாநாட்டினருக்குதவியாக வந்துவிட்டன. இன்னும் சிலதினங்களில் ஆக்ரமிப்பாளர்களாகிய நீங்கள் விரட்டியடிக்கப்படுவீர்கள். இது நிச்சயம்” என்று அவர்களை எச்சரித்தார். இதனால் ஆத்திரமடைந்த ஆக்ரமிப்பாளர் குண்டுகளால் அவரது உடலை சல்லடைக் கண்கள் போன்று துளைத்தனர். அத்துடன் அவரது மூக்கையும் அறுத்து முகத்தையும் கோரப்படுத்தினர். “இவன் ஒரு துரோகி. எல்லா துரோகிகளுக்கு இதேகதிதான் நேரும்” என்று எழுதப்பட்ட அட்டையையும் அவர் உடல்மீது ஒட்டினர். இக்கொடுஞ்செயல் நடந்து 48 மணி நேரமாவதற்குள் தீரர்ஷெர்வானியின் சொல் பலித்தது. இந்தியத்துருப்புக்கள் துரத்திவர ஆக்ரமிப்பாளர் பாராமுலாவை விட்டு ஓட்டம் பிடித்தனர். பிறகு தேசீய மஹாநாட்டின் உபதலைவர் குலாம் முஹம்மதுபக்ஷி முதலியவர்களால் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது சமாதியில் நின்று மக்களுக்குப் பிரசங்கம் செய்த பக்ஷி “ஷெர்வானியைப் போன்ற ஆயிரக்கணக்கான தீரர்களை தனக்கு வந்திருக்கும் ஆபத்தைத் தடுக்க காஷ்மீர் எதிர்பார்த்து ஆவலுடன் கையேந்தி நிற்கிறது. அவரின் தீரச்செய்கை ஒவ்வொரு காஷ்மீரிக்கும் வழிகாட்டும்” என்று கூறினார்.

ஆகவே சோதரீர் இத்தீரரின் ஒப்பற்ற செய்கையைப் பார்த்தீர்களா! இச்செய்கையை உலகம் போற்றும் உத்தமன் காந்திஜி கூட பாராட்டியுள்ளார். அவர் நமது தாயகத்தின் விடுதலைக்காக இக்கொடூரச் செயல்களையும் சகித்துக்கொண்டார். மரண பரியந்தம் தமது தேசபக்தியையும் நிரூபித்துக்காட்டினார். இந்திய முஸ்லிம்களாகிய நாமும் நமது நாட்டிற்கு எவ்வித ஆபத்தும் வராமல் பாதுகாத்து, அவசியமானால் உறுதியுடனிருந்து தீரர் ஷெர்வானியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி “தீரன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா!” என்று தலை நிமிர்ந்து நின்று தீரச்செயல்கள் மூலம் தாய் நாட்டின் எதிரிகளை முறியடிப்போமாக!

ஜெய் ஹிந்த்!

---

களுடன், காஷ்மீர் பாமரமுஸ்லிம் விவசாயிகளை கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாக்கிய பாகிஸ்தான் கொள்ளைக் கூட்டத்தினருடன் நாங்கள் ஒருக்காலும் சேரவே முடியாது. வேண்டுமென்றால் காஷ்மீரிலிருந்து பாகிஸ்தான் பிடாரிகளை விரட்டி அடித்த பிறகு ஒரு சுமுகமான சூழ்நிலையில் பொதுமக்கள் கொள்ளை, கொலை இவைகளை காஷ்மீரிகளுக்கு இழைத்த பாகிஸ்தான் பிசாசுகளுக்கு ஓட்டு அளிக்கின்றனரா, அல்லது கஷ்ட நஷ்டத்துக்குள்ளாக்கிய காஷ்மீர் மக்களையும், அவர்களது வீடு வாசல்களையும் சொத்துக்களையும் காத்துக்கொடுத்த இந்தியாவுக்கு ஓட்டு அளிக்கின்றனரா என்று பார்க்கட்டும்” இவ்வாறு காஷ்மீர் சிங்கம் ஷேக்முஹம்மது அப்துல்லா கர்ஜிக்கின்றார்

இப்போது காஷ்மீர் கமிஷன் ஐக்கிய நாடு ஸ்தாபனத்தால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்த கமிஷன் காஷ்மீருக்கு நேரில் சென்று பாகிஸ்தான் பிடாரிகள் குடல் தெறிக்க பாகிஸ்தான் பக்கம் ஓடுவதையும் கண்டிருக்கிறது. இந்த கமிஷன் காஷ்மீர் முழுவதாகவோ, ஒரு பாகமாகவோ பாகிஸ்தானுடன்சேருவதற்கு ஏற்பாடு செய்தால் அப்பேர்ப்பட்ட ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் நமக்கு வேலையில்லை. நாம் அந்த ஸ்தாபனத்திலிருந்தே விலகி விடுவதுதான் உசிதமான காரியமாகும். ஆகவே நம் இந்திய சர்க்கார் எந்த விதத்திலும் காஷ்மீரை விட்டு விடக் கூடாது. காஷ்மீர் பொது ஜன அபிப்பிராயத்தைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. காஷ்மீர் மக்களின் மனதில் பாகிஸ்தான் விஷம் தமிழ் நாட்டில் உறியதுபோல் ஊறவில்லை. மேலும் ஷேக்அப்துல்லா காஷ்மீர் நாட்டின் தலைவனாக இருக்கும் வரையில் காஷ்மீர் ஒருக்காலும் பாகிஸ்தானுடன் சேரவே சேராது

வாழ்க இந்தியா! வாழ்க காஷ்மீர்!

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 16—8—'48 திங்கட்கிழமை { இதழ் 29


## பாகிஸ்தானின் ஹிட்லரிசம்.

குற்றத்தை ஒப்புக் கொள்ள பாகிஸ்தானுக்கு பத்து மாதங்கள் பிடித்தன. பந்தோபஸ்து சபையில் புகார்தாக்கல் செய்வதற்கு முன்னாலிருந்து இதுவரை இந்தியாவின் குற்றச்சாட்டை மறுத்து வந்த பாகிஸ்தான் கடைசியில் தன்னுடைய துருப்புக்கள் காஷ்மீரில் போரிடுவதாக காஷ்மீர் கமிஷனுக்கு எழுதியிருக்கும் பதிலில் ஒப்புக்கொண்டிருக்கிறது. இவ்விதம் தன் குற்றத்தை ஒப்புக்கொண்ட பாகிஸ்தான் காஷ்மீர் படையெடுப்பு நியாயமான தென்பதற்கு கீழ்வரும் விசித்திரமான காரணங்களை வேறு காட்டுகின்றன "இப்பிப் பக்கிரியின் உதவியைக் கொண்டு பாகிஸ்தானை இருதரப்பிலிருந்தும் தாக்குவதற்கு இந்திய யூனியன் திட்டம் போட்டிருந்ததை நிரூபிக்கும் தஸ்தாவேஜுகள் பாகிஸ்தான் சர்க்காருக்கு கிடைத்திருக்கின்றன. ஆகையால் மே மாதத்தில் பாகிஸ்தான் தற்காப்புக்காக தன் துருப்புக்களை காஷ்மீருக்கு அனுப்பிற்று. இந்தியத்துருப்புக்களை பாகிஸ்தான் எல்லைக்கு அப்பால் தடுத்து நிறுத்துவதே பாகிஸ்தான் துருப்புக்களின் வேலை. தன் எல்லையில் போர் நடக்கையில் பாகிஸ்தான் சும்மாயிருக்க முடியாது. ராணுவ அடிப்படையில் காஷ்மீரை இழக்க பாகிஸ்தான் தயாராயில்லை. மேற்குப் பாகிஸ்தானின் எல்லா நதிகளும் காஷ்மீரிலிருந்து உற்பத்தி யாகின்றன. 'மங்களா' போன்ற முக்கிய அணைகள் அங்கிருக்கின்றன. மேலும் பாகிஸ்தானில் ராணுவ ஆள் சேமிப்புக்கு காஷ்மீர் முக்கிய இடமாகும்." என்ன கேலிக்கூத்தான காரணங்கள்! இந்தக்காரணங்களைக் காட்டுபவர்களின் வாயிலிருந்து ஹிட்லர், முஸோலினி, டோஜோவின் ஆத்மா பேசுகின்றது. இன்று நதிகளின் உற்பத்தி, அணைக்கட்டுகள் போன்ற காரணங்களால் பாகிஸ்தான் காஷ்மீர் மீது படையெடுத்ததை சரியென்று ஒப்புக்கொள்வதாய் இருந்தால் நாளை சைனாவின் பெரும் பகுதியை ரஷ்யா ஆக்ரமிக்க முடியும். ஆப்கானிஸ்தான் முழுவதையுமே ஈரான் விழுங்க முடியும். ஐரோப்பாவின் பெரும் பாகத்தில் ஜெர்மனி உரிமை கொண்டாட முடியும். அமெரிக்கா கண்டம் பூராவையுமே அமெரிக்கா ஸ்வீகரிக்க முடியும். காஷ்மீர் படையெடுப்புக்கு பாகிஸ்தான் காட்டும் காரணங்கள் கொள்ளையடிப்பதற்காக காஷ்மீரை மட்டுமின்றி இந்தியத் துருப்புக்களையும் தாக்கிக்கொண்டிருக்கும் பாஸிஸ்ட் ஆக்ரமிப்பாளன் காட்டும் காரணங்களேயாகும். பாகிஸ்தானை தாக்க இந்தியா விரும்பியிருந்தால் அதற்கு காஷ்மீர் ஒன்றே வழியல்ல. வேறு திசைகளிலிருந்தும் தாக்கியிருக்க முடியும். இந்தியத் தாக்குதலைக் குறித்த பாகிஸ்தான் கற்பனையை உண்மையென்று வைத்துக் கொண்டாலும் தன் துருப்புக்களை காஷ்மீரில் அனுப்புவதற்கு முன் பந்தோபஸ்து சபைக்கும், பிரிட்டிஷ் சர்க்காருக்கும் பாகிஸ்தான் ஏன் அறிவிக்க வில்லை? அல்லது இந்தியாவுக்கு இறுதி எச்சரிக்கை ஏன் விடுக்கவில்லை? இறுதி எச்சரிக்கை விடுவிக்கப்படாத எந்த யுத்தமும் சர்வதேச விதிகளுக்கு புறம்பான ஆக்ரமிப்பு நோக்கத்துடன் கூடிய தாக்குதலேயாகும். பாகிஸ்தானின் இவ்விதப்போக்கு பாகிஸ்தான் பாஸிஸ்ட் நிர்வாகிகளையும் ஹிட்லர், முஸோலினி, டோஜோவைப் போன்ற யுத்தக் குற்றவாளிகளின் வரிசையில் சேர்ந்து நிறுத்தியிருக்கிறது. தன்குற்றத்தை பாகிஸ்தான் தானே ஒப்புக்கொண்ட பிறகு அடுத்தபடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன? என்று பந்தோபஸ்து சபையையும் இந்திய சர்க்காரையும் கேட்க விரும்புகிறோம். பந்தோபஸ்து சபை சம்மந்தப்பட்டவரை அதன் முடிவையொட்டி காரியங்களைச்செய்ய எவ்வித அதிகாரமும் காஷ்மீர் கமிஷனுக்கு இனி இருக்கவில்லை யென்பதே நம் முடிவு. பாகிஸ்தானுக்கு எதிராக காஷ்மீர் கமிஷன் பந்தோபஸ்து சபைக்கு ரிப்போர்ட் செய்யவேண்டும். குற்றத்தை ஒப்புக்கொண்ட பிறகு துருப்புக்களை உடனடியாக வாபஸ் பெறும்படி பாகிஸ்தானுக்கு உத்திரவிட வேண்டியது பந்தோபஸ்து சபையின் கடமையாகும். இல்லையேல் இந்தியா காஷ்மீர் கமிஷனுடனோ அல்லது பந்தோபஸ்து சபையுடனோ எவ்விதத்திலும் ஒத்துழைக்க முடியாது. அத்துடன் இனி இந்திய சர்க்கார் எம்மாதிரி நடவடிக்கையை மேற்கொள்ளப் போகின்றது என்பது முக்கிய பிரச்னை. கொள்ளைக் கூட்டத்தினரை தடுத்து நிறுத்த தன்னால் முடியவில்லை என்றே பாகிஸ்தான் இதுவரை சொல்லிவந்திருக்கின்றது. ஆனால் இன்று காஷ்மீரில் துருப்புகளை அனுப்பிவைத்து காஷ்மீர் போரில் பங்கு எடுத்துக் கொண்டிருப்பதாக பாகிஸ்தானே ஒப்புக்கொண்டிருக்கிறது. கமிஷனுக்கு அனுப்பிய பதிலில் தன் குற்றத்தை பாகிஸ்தான் ஒப்புக்கொண்டிருப்பது வாஸ்தவமானால் காஷ்மீரிலிருந்து துருப்புக்களை உடனடியாக

# "ஜெய் ஹிந்த்"

—(நாகை V. E. M. ஹமீதுயூசுபுவத்தனி)

ஒரு முஸ்லிம் ஜெய்ஹிந்த் என்று சொன்னவுடன் முஸ்லிம்களுக்கு கோபம் வந்துவிடுகிறது "ஜெய்ஹிந்த்" என்றால் "ஹிந்துக்களுக்கு வெற்றி" என்று வியாக்கியானம் செய்ய ஆரம்பித்துவிடுகின்றனர். தவறான எண்ணத்தைப் போக்கி உண்மையை விளக்கவேண்டியது என் போன்ற தொண்டர்களின் கடமையாகையால் உண்மையை விளக்க ஆசைப்படுகின்றேன். இனிமேலாவது குரோத நோக்கத்தின் கண்ணோட்டமுள்ள லீகர்கள் உணர்ந்துகொள்வார்களாக!

"ஜெய்ஹிந்த்" என்றால் "இந்தியாவுக்கு வெற்றி" என்பது பொருள் இந்திய யூனியனில் உள்ள ஹிந்து முஸ்லிம்கள் தங்கள் தாய் நாட்டுக்கு வெற்றி என்று சொல்லுவதில் தவறு ஒன்றுமில்லை. இந்திய வெற்றியை விரும்பாதவன் இந்தியனல்ல அவனுக்கு இந்தியாவில் இடமில்லை. பாகிஸ்தான் சர்வாதிகாரியான மிஸ்டர் ஜின்னா கூட இந்திய யூனியன் முஸ்லிம்கள் யூனியனுக்குக் கட்டுப்பட்டு விஸ்வாஸமாய் நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்லிச் சென்றார். இந்திய அரசியல் நிர்ணய சபையில் லீக் கட்சி தலைவராக இருந்தவரும், தற்பொழுது பாகிஸ்தானுக்கு ஓடிப்போய் ஷரீபத் சட்டத்தை எதிர்த்து வருபவருமான சௌத்ரி கலிகுஸ்ஸமான் இந்திய அரசியல் நிர்ணய சபையில் ஒரு சமயம் "ஜெய்ஹிந்த்" என்று கோஷமிடுவதில் நான் இந்தியன் என்ற பெருமையடைகிறேன்" என்று கொடித்தீர்மானம் வந்தபொழுது சொல்லியுள்ளதை ஞாபகப்படுத்திப்பாருங்கள். மாஜி வங்கப்பிரதமரும், லீக் பிரமுகருமான சுஹ்ரவர்த்தியும் "ஜெய்ஹிந்த்" என்ற கோஷத்தை ஒவ்வொரு இந்திய முஸ்லிமும் கோஷிக்கவேண்டுமென்றும் தேசீயக்கொடியைத் தன் இல்லத்தில் பெருமையுடன்ஏற்றிவைக்கவேண்டுமென்றும்கூறியுள்ளார். "ஜெய்ஹிந்த்" என்றால் முஸ்லிம்களுக்கு விரோதமானது என்று நினைப்பது தவறென்று அவர் கூறியிருப்பதையும் ஊன்றிக் கவனியுங்கள். நாம் மட்டிலும் ஏன் பிற்போக்கிலும், தப்பர்த்தத்திலும் உழன்று கொண்டிருக்கவேண்டும்?

நமது அஜ்மீர் ஹாஜா முயீனுத்தீன் சிஷ்தி அவர்களுக்கு "வலியுல் ஹிந்த்" என்னும் பட்டம் இருப்பதையும் இங்கு குறிப்பாய் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

ஆகவே இனி லீகர்கள் ஒவ்வொருவரும் "ஜெய் ஹிந்த்" என்றால் என்ன என்பதை உணர்ந்து அக்கோஷத்தை பெருமையுடன் முழங்க முற்படுவார்களாக! ஜெய் ஹிந்த்!

## கும்பகோணம்

8—8—48 ஞாயிற்றுக்கிழமை கும்பகோணம் ஷரீப் மஹாலில் நடந்த கூட்டத்தில் தேச ஊழியர் அம்மாப்பேட்டை ஸ்ரீ P வெங்கட்ராமய்யர் M. L. A. அவர்களின் சஷ்டியப்த பூர்த்தியைக் கொண்டாட தஞ்சை ஜில்லாவில் பதினெட்டு அங்கத்தினர்களைக் கொண்டதொரு கமிட்டி நிருவப்பட்டு ஜனாப் K. M. ஷரீப் சாஹிப் கன்வீனராகவும், டாக்டர் R. மஹாலிங்கய்யர், பொக்கிஷதாராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 31—8—48-ல் நடைபெறவிருக்கும் மேற்படி ஊழியரின் 60-ம் ஆண்டு நிறைவு நாளை சிறப்பாகக்கொண்டாடி அன்னாருக்கு ஒரு பணமுடிப்பு அளிப்பதென்றும் வைபவத்துக்கு தலைமை தாங்க மந்திரிகளில் ஒருவரை அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அபிமானத்துடன் நன்கொடை அளிப்பவர்கள் R. மஹாலிங்கய்யர், பச்சையப்ப முதலித் தெரு, கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

K. M. ஷரீப், கன்வீனர்.

[ முன் பக்கத் தொடர்ச்சி. ]

வாபஸ் பெறாவிட்டால் பாகிஸ்தானுடன் இந்தியாவுக்கு இருந்துவரும் அரசியல், பொருளாதார உறவுகள் அனைத்தும் துண்டித்துக் கொள்ளப்படுமென பாகிஸ்தான் சர்க்காரை இந்தியசர்க்கார் ஏன் எச்சரிக்கக்கூடாதென்று கேட்கிறோம். படையெடுப்பாளரை எதிர்த்து நிற்பது சுதந்திர நாட்டின் கௌரவத்தை காப்பதற்கு அவசியம். இன்றுகாஷ்மீரில் நடந்திருக்கும் இதே காரியம் நாளை இந்தியாவின் இதர எல்லைகளிலும் நடக்கலாம் பாகிஸ்தானின் இவ்விதபோக்குக்குப்பிறகு காஷ்மீரில் தன்னுடைய முழுபலத்தையும் உபயோகித்து பாகிஸ்தானுக்கு பாடம் கற்பிக்க வேண்டியது இந்தியாவின் கடமை யாகிவிட்டது. எவ்விதத்திலும் காஷ்மீரிலிருந்து இந்தியா துருப்புக்களை வாபஸ் பெறக்கூடாது பந்தோபஸ்து சபையில் தன் கட்சியைப் பலப்படுத்தி காஷ்மீரில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். அத்துடன் யுத்தத்துக்கு பிரயோஜனப்படும் சாமான்களையும் துணிமுதலிய யுத்தத்தில் நமக்கு எதிராக பிரயோஜனப்படக்கூடிய பண்டங்களையும் பாகிஸ்தானுக்கு அனுப்பாமல் நிறுத்திக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

# ஒளரங்கஸீபும் ஹிந்து தேவாலயங்களும்.

(‘பாராபங்கி’ ஜில்லாவைச் சார்ந்த ‘ராம்நகர்’ என்னும் சமஸ்தான மானேஜராகிய “மாயூராம் நாராயண்” எழுதியது.)

‘ஆலம்கீர்’ என்னும் ஒளரங்கஸீபை மதவெறி பிடித்தவரென்று பலர் கூறுகின்றனர். ஒளரங்கஸீப் ஹிந்துமத தேவாலயங்களை இடித்து நாசமாக்கியதாயும், ஹிந்துக்களுக்கு சொல்லொணாக் கஷ்ட நிஷ்டூரங்களைப் புரிந்துகொண்டிருந்ததாயும் பறை சாற்றுவோருக்குப் பஞ்சமில்லை. ஆதலின் இத்தகையோர் கூறுவதுள் ஏதேனும் உண்மையிருக்கிறதா, என்று ஆராயவேண்டியது நம் கடமையல்லவா?

மத வைராக்கியம் காரணமாய் தேவாலயங்கள் இடிக்கப்பட்டனவென்று எவர் கூறினும் அக்கூற்றையான் அங்கீகரிக்கக் கூடவில்லை. ஏதேனும் இடிக்கப்பட்டிருப்பின் அது ராஜீய லட்சியத்தை அடிப்படையாய்க் கொண்டிருக்குமென்று நான் நிச்சயமாய்க் கூறுகிறேன். மேலும் ஒளரங்கஸீப் மதவெறி பிடித்தவரென்றும் சதா விக்கிரகங்களை நாசமாக்குவதைத் தொழிலாய்க் கொண்டிருந்தவரென்றும் கூற நியாயமில்லையென்பதற்குறிய சாட்சியங்களும் சிலவற்றை இதனடியில் எடுத்துக் காட்டுகிறேன் :—

1. சித்தாப்பூரில் பிரசித்திபெற்ற ஹிந்து தேவாலயமொன்றுண்டு. இத் தேவாலயத்தின் மஹந்துவிடத்தில் ஒளரங்கஸீப் அவர்களால் அளிக்கப்பட்ட ஓர் இனாம் சாசனமிருக்கின்றது. இச் சாசனத்தின் மூலமாய் மதக்கிரியையின் செலவுக்காக மஹந்துவுக்கு ஏராளமான பூமிகள் கிடைத்திருந்தன. அப்பூமிகளுள் சில இத்தேவாலயத்தின் இன்றைய மஹந்துவின் ஸ்வாதீனத்திலிருப்பதைப் பார்க்கலாம்.

2 மத்தூராவுக்குச் சமீபத்தில் ‘பல் தேவ்தாவர்’ என்றோர் ஸ்தலமிருக்கின்றது. அங்குள்ள ‘பல் தேவ்ஜி’ என்னும் கோயிலின் செலவுக்காக ஒளரங்கஸீப் பல பூமிகளை யளித்திருக்கின்றார். அப்பூமிகள் இன்றைக்கும் ‘பல் தேவ்ஜி’ கோயிலுக்குச் சொந்தமாக விருக்கின்றன. மேலும் இவ்வாறே ஒளரங்கஸீப் பல ஹிந்து கோயில்களுக்கு பூமிகளை இனாமளித்திருக்கக் கூடுமென்று கருதவேண்டியிருக்கின்றது.

3. அலஹாபாத்தில் ஜம்னா நதிக்கரையிலிருக்கின்ற கோட்டை அக்பர் சக்ரவர்த்தியின் காலத்தில் கட்டப்பட்டது. ஆனால் இக்கோட்டை ஒளரங்கஸீபின் ஆதிக்கத்தில் இருந்துவந்தது, என்னும் உண்மையை எவரேனும் மறுக்க வியலுமா? இக்கோட்டைக்குள் ஹிந்துக்களின் கோயிலொன்றிருக்கின்றது. இக்கோயிலினும் கோயிலைச்சுற்றிலும் ஆயிரக்கணக்கான விக்கிரகங்கள் இருக்கின்றன. மேலும் இக்கோயிலுக்குச் சமீபத்தில் ஒரு பெரிய விருக்ஷமுமுண்டு. இன்றைக்கும் பல்லாயிரக் கணக்கான ஹிந்துக்கள் இத்தேவாலயத்தைத் தரிசித்து வருகின்றனர். மேலும் இக்கோவிலின் பூசாரி, பண்டாரம் முதலியோர் இன்றுவரை தங்கள் கொள்கைப்படி பூசையை நடத்திவருகின்றனர். இத் தேவாலயத்திலிருக்கும் மூர்த்திகளை உற்று நோக்குவோமாயின் இவைகள் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் செய்யப் பட்டவைகளென்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். மேலும் இத் தேவாலயத்திலுள்ள மூர்த்திகளில் ஒன்றேனும் பின்னப்படுத்தப்பட்டதாகக் காணக்கூடவில்லை. ஒளரங்கஸீப் மதவெறி பிடித்தவராயும் விக்கிரகங்களையும் உடைத்து நாசஞ் செய்தவராயுமிருந்தாரென்பது உண்மையாயின் முதலாவதாகத் தங்கள் கோட்டைக்குள்ளிருக்கும் தேவாலயத்தையும், விக்கிரகங்களையும் நாசஞ் செய்திருக்க வேண்டுமல்லவா?

4. பின்னப்படுத்தப்பட்ட விக்கிரகங்களேதேனும் இன்று கிட்டிவிடுமாயின் அது ஒளரங்கஸீப்பால் பின்னப்படுத்தப் பட்டதென்று கூற எவரும் முற்படுவதைப் பார்க்கலாம். ஆனால் உண்மை வேறு. சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் காலத்தில் ஜைனமதம், புத்தமதம் ஆகிய இரு மதத்திற்கும் விரோதமாய் பெரிய யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. அப்பொழுது பின்னமாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான விக்கிரகங்கள் ஹிந்து தேவாலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இத்தகைய விக்கிரகங்களை நான் என் கண்களால் பார்த்திருக்கின்றேன். ஆனால் இவைகள் ஒளரங்கஸீப்பால் உடைக்கப்பட்டன வென்று கூறுவது நியாயமா?

“அல்கலாம்”

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது “ஆஸாத்” விற்பனை செய்ய
ஏஜெண்டுகள் தேவை.

# — முஸ்லிம்களுக்கோர் உபதேசம். —

ஆதரவற்ற முஸ்லிம்களே! உல்லாசப்பேர்வழிகளின் வலையில் சிக்குண்டிருந்த முஸ்லிம்களே! இஸ்லாமின் அழகிய உருவத்தை பாழ்படுத்திய முஸ்லிம்களே! நல்லொழுக்கம், முன்னேற்றம், ஆகிய வழிகளை மறந்து அலைந்து திரியும் முஸ்லிம்களே! நீங்கள் எதுவரை அறிவிழந்து ஓடித்திரிவீர்களோ! தெரியவில்லை. உங்களுடைய பண்டைய உயர்வை மறந்துவிட்டீர்களா! நேற்று உங்கள்சமூகம் அடைந்திருந்த உன்னதஸ்தானத்தை சிந்தித்துப் பார்க்க மாட்டீர்களா?

இன்று நீங்கள் இத்தகைய ஆழமான இழிவுப் படுகுழியில் ஏன் விழுந்து தவிக்கிறீர்கள்? சீரும் சிறப்புமுள்ள உங்கள் பேரதிர்ஷ்ட காலத்திய நட்சத்திரங்களின் பிரகாசம் இஸ்லாமிய எதிரிகளின் கண்களைக் கூசும்படிச் செய்துகொண்டிருந்ததல்லவா? நீங்கள் அரிய உன்னதஸ்திதியை அடைந்த வரலாறு உலகம் பூராவிலும் பறை சாற்றப்படவில்லையா? பிரசித்திபெற்ற வீரர்களும உங்கள் ஆண்மை, வீரம், நேர்மையைத் துதிக்கவில்லையா? பண்டிதர்களும், பெரிய மேதாவிகளும் கண்டுபிடிக்க முடியாத நுட்பமான உண்மையையும். இரகஸ்யத்தையும் உங்கள் உறுதியின் பிரகாசத்தால் இமைப்பொழுதில் நீங்கள் கண்டுகொண்டீர்களல்லவா?

கல்வியில் சிறந்து விளங்கிய மகான்கள் உலகின் நாலாபக்கங்களிலும் உங்கள் கல்வித்திறமையையும், அறிவின் முதிர்ச்சியையும் புகழ்ந்தனர். உங்களுடைய நேர்மை நல்லொழுக்கத்தை உலகத்தோர் மெச்சினர். உங்களுடைய முன்னோர்கள் பின்பற்றிய இஸ்லாமையே நீங்களும் பின்பற்றுவதாகக் கூறுகின்றீர்களாயினும் உங்கள் நிலைமையைக்கண்டு பரிதபிக்காமலிருக்கக்கூடவில்லை.

துரதிர்ஷ்ட முஸ்லிம்களே! இன்று உலகில் உங்களை இழித்துக் கூறுதார் உண்டா! கல்வியின்மை, அறியாமை, அநாகரீகம் முதலிய குறைசள் உங்களுள் குடிகொண்டிருக்கின்றன முஸ்லிம்கள் பூமிக்கு அடியிலும், இஸ்லாம் ஏடுகளிலும் அடங்கிவிட்டதாகக்கூற இன்று நீங்கள் இடம்கொடுத்துவிட்டீர்கள். உங்களை நோக்கி "நீங்கள் முஸ்லிம்களா?" என்று கேட்கவேண்டியிருப்பது மட்டுமின்றி "மனிதர்களா?" என்றும் கேட்கவேண்டிய நிலைமைக்கு இன்று வந்துவிட்டீர்கள்.

ஐஸ்வர்யம், வீரம், கல்வி, ஒழுக்கம் முதலிய எதுவும் இன்று உங்களிடம் இல்லை. எல்லாமே உங்களைவிட்டு ஏகிவிட்டன. இன்று உலகம் உங்களைக்கண்டு நகைக்கின்றது. முன்னேற்றமும் நாகரீகமும் உங்கள் ஈன ஸ்திதியைப் பார்த்து பரிகசிக்கின்றது. பரிசுத்த இஸ்லாம் உங்களின் துரதிர்ஷ்டத்தைக் கண்டு கண்ணீர் சொரிகின்றது.

மறதியால் மதிமயங்கிக்கிடக்கும் முஸ்லிம்களே! உங்கள் துர்திர்ஷ்டத்திற்கு ஓர் எல்லை கிடையாதா? உங்களின் அலட்சிய புத்தி, அறியாமை, மறதியாகிய குற்றங்களுக்கு நீங்கள் அனுபவித்த தண்டனை போதாதா? உங்கள் அயர்வு உண்மையில் நித்திரையாயின் அதற்கு ஒரு முடிவு கிடையாதா? உண்மையாகவே உங்களுக்குள் ஜீவன் இருக்குமாயின் நீங்கள் விழிக்காமலிருக்க முடியுமா?

அன்புக்குரிய முஸ்லிம்களே! நீங்கள் சொல்லொணா கஷ்ட நிஷ்டூரங்களுக்கு இறையாகி விட்டீர்களென்பது உண்மையே. ஆயினும் நேர்மையை அணிகலனாகக் கொள்வீர்களாயின் அளவுகடந்த அருளாளனான ஆண்டவன் நம்மை ஆதரிப்பான் என்பது திண்ணம்.

முஸ்லிம்களே! நிகழவேண்டியதாக விருந்த துக்ககரமான சம்பவங்கள் அனைத்தும் நிகழ்ந்துவிட்டன. உங்களுடைய அறியாமைக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் எல்லாம் நீங்கள் அனுபவித்து விட்டீர்கள். நம்பிக்கையை இழந்துவிட வேண்டாமென்ற திரு குர்-ஆனின் போதனையை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். நம்பிக்கையை கைவிடாதீர்கள் அவநம்பிக்கைப் படுகுழியில் ஆழ்ந்துபோகாதீர்கள்.

முயற்சிக்கு சந்தேகமற ஆண்டவன் பலனளிப்பான் என்று கருத்தில் கொண்டு உறுதியுடன் எதிர்காலத்தை உருவாக்கும் வேலையில் ஈடுபடுங்கள். பார்வையை மறைத்துக்கொண்டிருக்கும் துவேஷத் திரையைக் கிழித்தெறியுங்கள். எல்லோரையும் படைத்து பாரபட்சமின்றி இரட்சிக்கும் ஆண்டவனை தியானியுங்கள். அவனுடைய உத்திரவுகளுக்கு செவிசாய்த்தவர்களாக இருங்கள். நற் சக்தியையும் ஆத்மார்த்தீக உயர்வையும் பாழ்படுத்திய துவேஷம் வகுப்புவாதம் முதலிய நோய்களை நபிகள் நாயகம அவர்களின் நற்போதனைகளைக் கொண்டு அகற்றுங்கள். அபுபக்கர் சித்தீக்கின் உண்மை, உமர்-கத்தாப்பின் நீதி, உஸ்மானின் தயாளம், அலியின் வீரத்துடன் இன்றைய நிலையிலிருந்து வெளிக்கிளம்புங்கள். கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம் உங்களுடைய லட்சியங்களாக இருக்கட்டும்.

எங்களைப் படைத்து இரட்சிக்கும் நாயனே! தயை புரிவாயாக! எங்களைச்சேர்ந்த ஒவ்வொருவனின் ஹிருதயத்தையும் ஏக தெய்வக் கொள்கையின் ஒளியால் பிரகாசிக்கச் செய்வாயாக! அந்தகாரப், அறியாமை, நய வஞ்சகம், துவேஷம், வெறுப்பு, முதலிய துர்க்குணங்களை களைந்து எங்கள் உள்ளங்களை சுத்தப்படுத்துவாயாக! இஸ்லாமின் நேரான வழியை பின்பற்றி நடந்து நமக்கும் உலகத்துக்கும் நன்மை பயக்கும் ஆற்றலை நமக்கு அளிப்பாயாக!

# காங்கிரஸா? சோஷியலிஸ்டு கட்சியா?

## முஸ்லிம்கள் எதில் சேரவேண்டும்?

ஒரு பிரச்னையில் சாதக பாதகஅம்சங்களை ஸ்பஷ்டமாய் உணர்த்துவதற்கு அதை சம்பாஷனை ரூபத்தில் வெளியிடுவது சிறந்த முறையாகும். இன்றைய நிலைமையில் பொதுவாக இந்தியர்களுக்கும் குறிப்பாக இந்திய முஸ்லிம்களுக்கும் கீழ்வரும் சம்பாஷனை மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருக்குமென்று நம்புகிறோம். (ஆசிரியர்)

ராமு:— அன்வர்! சோஷியலிஸ்டுகட்சி காங்கிரசிலிருந்து ஏன் வெளியேறிற்று?

அன்வர்:—தாங்களாக வெளியேற வில்லை யென்றும் தாங்கள் வெளியேற்றப் பட்டிருப்பதாகவுமே சோஷியலிஸ்டுகள் சொல்லுகின்றனர். ஏனெனில் புதிய விதிகளின்படி எந்த ஒரு தனிக்கட்சியும் காங்கிரஸில் இருந்துவர முடியாது.

ராமு:—சோஷியலிஸ்டுகளைப் போன்ற சுயநல மற்றவர்களைக்கூட காங்கிரஸிலிருந்து வெளியேற்ற வேண்டிய அப்பேர்ப்பட்ட அவசியந்தான் என்ன?

அன்வர்:—இருவித நோக்க முள்ளவர்கள் ஒரு ஸ்தாபனத்திலிருப்பதால் அபிப்பிராயபேதம் தவிர்க்க முடியாமல் போய்விடுகின்றது; அதனால் ஸ்தாபனத்தின் வேலைகள் தடை படுகின்றன ஒரு ஸ்தாபனத்தில் ஒரே நோக்கங் கொண்டவர்கள்தான் இருக்க வேண்டும். கோஷ்டிப்பிரிவினைகள் கூடாது தங்களுடைய தனிப்பட்ட கொள்கைகளை பிரசாரம் செய்ய விரும்புகிறவர்கள் அதை பலவந்தமாக ஸ்தாபனத்தில் புகுத்த முயற்சிப்பது சரியல்ல. அவசியமானால் தங்களுக்காக ஒரு தனிமேடையை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று காங்கிரஸ் காரர்கள் சொல்லுகின்றனர்.

ராமு:—நியாயந்தான்! ஆனாலும் இத்தனை வருஷங்களாக சோஷிலியஸ்டுகள் காங்கிரஸில் எப்படி இருந்து வந்தனர்? மேலும் காங்கிரஸ் எப்படி அவர்களை அனுமதித்தது?

அன்வர்:—அடிமை நாட்டிலே கட்சி ஸ்தாபனம், வர்க்கம் என்ற பிரச்னைகள் முக்கிய மல்ல. தேசத்தின் விடுதலையே பிரதான லட்சியமாக இருக்க முடியும். நாட்டை விடுவிக்க பலமான ஒரு தேசீய முன்னணி அவசியம். காங்கிரஸ் இந்திய விடுதலைப் போராட்டத்தின் பிரதான அரங்கமாக அமைந்திருந்தது. எனவே சோஷியலிஸ்டுகள் காங்கிரஸிலிருந்து உழைத்தனர். சோஷியலிஸம் நிலைபெற வேண்டுமானாலும் சுதந்திரத்திற்குப் பிறகுதான் அது சாத்தியமென்பது வெளிப்படை. சோஷியலிஸ்டுகள் காங்கிரஸில் இருந்து வந்ததற்கு அதுதான் காரணம். எதிரியை முறியடிப்பதற்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிக ஆதரவு கிடைக்குமோ அவ்வளக்கவ்வளவு நல்லது. சோஷியலிஸ்டுகள் சுதந்திரப் போராட்ட அரங்கத்தில் வீரசிப்பாய்களாக விளங்கின ரென்பது அனைவரும் அறிந்த விஷயம் எனவே காங்கிரஸும் அவர்கள் இருந்து வருவதை அனுமதித்ததில் ஆச்சரியமில்லை

ராமு:—அப்படியானல் காங்கிரஸ் இன்று ஐக்கிய முன்னணியாக இல்லாமல் போய்விட்டதா?

அன்வர்:— நாட்டின் பொதுஎதிரி புறமுதுகு காட்டி ஓடிவிட்ட பிறகு ஐக்கிய முன்னணி அவசியமில்லை என்றும் இன்றைய காங்கிரஸ் ஐக்கிய முன்னணியின் அந்தஸ்தை இழந்துவிட்டதென்றும் சோஷியலிஸ்டுகள் சொல்லுகின்றனர்.

ராமு:—தாங்கள் வெளியேற்றப் பட்டிருப்பதாக சோஷியலிஸ்டுகள் சொல்லுகின்றனரென்று சொன்னீர்கள். அப்படியானல் காங்கிரஸ் அவர்களை வெளியேற்றுமல் இருந்திருந்தால் தாங்களாகவே அவர்கள் வெளியேறி இருக்க மாட்டார்களென்று ஏற்படுகிறதல்லவா? அப்பொழுதுமட்டும் காங்கிரஸ் ஒரு ஐக்கிய முன்னணியாக இருந்திருக்கமுடியுமா?

அன்வர்:—நியாயமான கேள்விதான் விடுதலைக்குப்பிறகு காங்கிரஸிலிருந்து வெளியேறி நாட்டில் சோஷியலிஸத்தை நிலை நாட்ட உழைப்பதென்றே சோஷலிஸ்டுகள் நினைத்திருந்தனர். ஆனல் விடுதலைக்குப்பிறகு நாட்டில் தலைதூக்கிய வகுப்புவாத உணர்ச்சியின் பலனுக தேசத்தில் பிற்போக்கு பாஸிஸ்டு சக்திகள் தோன்றின சோஷலிஸத்தை வளர்ப்பது ஒரு புறமிருக்க புதிதாக கிடைத்த சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்குமே ஆபத்து ஏற்பட்டிருந்தது. நெருக்கடியான அக்கட்டத்தில் காங்கிரஸை பலஹீனப்படுத்த சோஷியலிஸ்டுகள் விருபவில்லை

ராமு:—அப்படியானல் இன்று அந்த அபாயம் அகன்று விட்டதா?

அன்வர்:—அறவே அகன்று விட்டதாகச்சொல்லுவதற்கில்லை. அதனல்தான் சோஷியலிஸ்டுகளும் காங்கிரஸிலிருந்து வெளியேற விரும்பாமலிருந்தனர்.

ராமு:—அது எப்படியும் இருக்கட்டும். சோஷியலிஸ்டு கட்சி கர்ங்கிரஸிலிருந்து வெளியேறியதால் நாட்டுக்கு நன்மையா? தீமையா?

அன்வர்:— இது மிகவும் விசித்திரமான கேள்வி. இதற்கு பதிலளிப்பது மிகவும் சிரமம். சோஷியலிஸ்டுகளின் வெளியேற்றத்தால் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. சோஷியலிஸ்டுகள் காங்கிரஸில் இருந்தபோது காங்கிரஸிலும் இருக்கும் வகுப்புவாதப் பிற்போக்காளர்கள் இருக்குமிடந் தெரியாமல் அடங்கியிருந்தனர். பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு பேராதரவு இருந்தது. காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் இந்திய சர்க்காரிலும் சோஷியலிஸ்டுகள் இருந்திருந்தால் பிற்போக்காளர்களின் சக்தி ஒடுங்கியிருக்கமுடியும் சோஷியலிஸ்டுகளின் வெளியேற்றத்தால் காங்கிரஸின் உடலிலிருந்து வாலிபரத்தம் வெளிப்பட்டு விட்டதென்றே சொல்லவேண்டும். ஆயினும் சோஷியலிஸ்டுகள் வெளியேறிய பிறகு இனி இந்தியர்கள் இரண்டு கோஷ்டிகளாகப் பிரியப் போகின்றனர். காங்கிரஸுக்கும் சோஷியலிஸ்ட் கட்சிக்கும் இடையே கொள்கைப்போராட்டம் ஆரம்பமாகப் போகின்றது. மேல்நாட்டு ஜனநாயக ஆதரவாளர்கள் காங்கிரஸை ஆதரிப்பர். பொதுவுடமை வாதிகள் சோஷியலிஸ்ட் கட்சியிலிருப்பர். நாட்டு மக்களின் கவனம் ஹிந்து முஸ்லிம் பிரச்னை என்ற வகுப்புவாத துறையைவிட்டு காங்கிரஸ் சோஷியலீஸ்டு போராட்டத்துறையில் திரும்பப்போகின்றது. காங்கிரஸ் வெற்றியஸ்டந்தாலும் நாட்டுக்குநன்மைதான். சோஷியலீஸ்டுகளுக்குவெற்றி கிட்டினுலும் நாட்டுக்கு இன்னும் அதிக நன்மைதான். இரண்டு விதத்திலும் நாடு முன்னேற்ற மடையுமென்பது நிச்சயம்.

ராமு—சோஷியலிஸ்டு கட்சி சட்டசபைகளில் எதிர்கட்சியாக இருக்குமென்று சொல்லப்படுவதன் அர்த்த மென்ன?

அன்வர்:—உண்மைதான். உண்மையான ஒரு எதிர்கட்சியின்றி ஜனநாயகம் நடைமுறையில் சாத்தியமில்லை. ஐரோப்பிய ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டிருக்கையில் அத்துடன் எதிர்க்கட்சியும் அவசியம் என்பதை ஏற்றுக்கொண்டு தானுக வேண்டும். ஐநூறு வருஷ அனுபவத்துக்குப் பிறகு ஐரோப்பிய மக்கள் ஜனநாயக நாட்டில் எதிாகட்சியின் அவசியத்தை உணர்ந்திருக்கின்றனர்.

பாபு:—ஆனுல் அன்பரே! சோஷியலிஸ்டு கட்சி உண்மையான எதிர்கட்சியாக அமைய முடியுமென்ற நீங்கள் நம்புகிறீர்களா?

அன்வர்:—இதுவரை நம் நாட்டில் இருந்துவந்த எதிர்கட்சிகள் வகுப்புவாத அடிப்படையைக் கொண்டிருந்தன. பிரகாசம் ஆட்சி ஹிந்து ஆட்சியென்றும் எனவே அதை எதிர்ப்பது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையென்றும் பிரசாரம் நடந்துவந்தது. இதைப்போலவே சுஹ்ராவர்த்தி ஆட்சி முஸ்லிம் ஆட்சியென்றும் எனவே அதைஎதிர்ப்பது ஒவ்வொரு ஹிந்துவின் கடமையென்றும் பிரசாரம் செய்யப்பட்டது. அவ்வித சாபக்கேட்டிலிருந்து இன்று நாம் விடுதலை பெற்றிருக்கிறோம். சோஷியலிஸ்டு கட்சியை உண்மையான எதிர் கட்சியென்று சொல்லலாம். அவர்களுடைய தேசப் பற்றை சந்தேகிப்பதற்கில்லை. அத்துறையில் காங்கிரஸ் காரர்களைவிட சோஷியலிஸ்டுகள் எவ்விதத்திலும் பின்னடைந்தவர்களல்ல.

பாபு:—காங்கிரஸ்சோஷியலிஸ்டு கட்சியின்போராட்டம் கொள்கை அளவோடு மட்டும் நின்று விடுமென்று நீங்கள் நம்புகிறீர்களா? நடக்கப்போகும் பொதுத் தேர்தல்களில் இரண்டு கட்சிகளும் போட்டி போட்டுக்கொண்டு கொள்கை போராட்டத்தின் வரம்பை மீருமல் இருக்குமென்று எப்படிச் சொல்ல முடியும்.

ராமு:—சோஷியலிஸ்டுகள் செய்யும் தீவிரமுயற்சி காங்கிரஸை குறைகூறி முறியடித்து வெளியேற்றி மந்திரி சபைகளை கைப்பற்றுவதற்காக அல்ல வென்று சொல்ல முடியுமா?

அன்வர்:—இது லீகர்களின் மனப்பான்மை. தங்களுடைய எதிரிகளை நேர்மை யற்றவர்களென்று நினைப்பது லீகர்களின் வழக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகத்தான் சோஷியலிஸ்டுகள் முயற்சிக்கின்றனர் என்பதை ஒப்புக் கொண்டாலும் அதை தவறு என்று சொல்வதற்கில்லை. சுதந்திர நாடுகளில் சேவை செய்ய அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டியதவசியம். பிறகுதான் தங்களுடைய திட்டத்தை நிறைவேற்றி நடத்தமுடியும். ஐயாயிரம், பதினுயிரம் சம்பளம் பெறுவதற்கும் பங்களாக்களில் வசிப்பதற்கும் உல்லாசப் பிரயாணம் செய்ய சாதனங்கள் பெறுவதற்கும் டின்னர் பார்ட்டிகள் சாப்பிடுவதற்கும் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிப்பது சரியல்ல. மக்களுக்கு சேவை செய்யவும் தங்கள் திட்டத்தை நிறைவேற்றிவைக்கவும் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிப்பது குற்றமல்ல. சோஷியலிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கின்றன ரென்றுல் சுதந்திர நாட்டில் சேவையின் சாதனம் அதிகாரந்தான். அதிகாரம் கைக்குவந்தபிறகுதான் கட்சிகள் தங்களுடைய திட்டத்தின் நியாயமான தன்மையை மக்களுக்கு உணர்த்த முடியும்.

ராமு:—சோஷியலிஸ்டுகளின் திட்டம் என்ன? அவர்கள் எதை விரும்புகின்றனர்?

அன்வர்:—சோஷியலிஸ்டுகள் இந்தியாவில் ஒரு சோஷியலிஸ ஆட்சியை அமைத்து பொதுவுடமையை நிலைநாட்டவே ஆசைப்படுகின்றனர்.

ராமு:— பொதுவுடமை என்ருல் என்ன?

அன்வர்:—பொதுவுடமையை தெரிந்துகொள்ள பெரிய பெரிய புத்தகங்களை பிரட்டியாக வேண்டும். சுருங்கச் சொல்ல வேண்டுமாயின் நாட்டின் மூலதனத்தைப் பெருக்கும் சாதனங்களான, நிலம், சுரங்கங்கள், மில்கள், தொழிற்சாலைகள், வர்த்தகம் முதலியவைகள் மீதுள்ள தனிநபர் ஆதிக்கத்தை அகற்றுவதே பொதுவுடமையென்று சொல்லலாம்.

ராமு:— அதனுல் என்ன பிரயோஜனம்?

அன்வர்:—அதனுல் ஒரு சில முதலாளிகளின் இரும்புப்பெட்டிகளில் தேங்கிக் கிடக்கும் நாட்டின் மூலதனம் பொதுமக்களிடையே சரிசமமாக விநியோகிக்கப்பட வழிபிறக்கும் குறிப்பிட்ட சிலமக்கள் லாப மடைவதற்குப்பதிலாக மக்கள் அனைவருமே லாப மடைவார்கள்.

ராமு:—அது எவ்விதம்?

அன்வர்:—உதாரணமாக ஜெம்ஷெட்பூரிலுள்ள டாடா தொழிற்சாலையை எடுத்துக் கொள்வோம். அதன் வருஷ வருமானம் ஏறக்குறைய பத்துகோடி ரூபாய். இந்தத்துகை டாடா கம்பெனி முதலாளிகளான ஒரு சிலநபர்களுக்கு மட்டும் சேருகிறது. இவ்வளவு பெருந்துகையால் பொது மக்களுக்கு எவ்வித பிரயோஜனமுமில்லை. இதற்கு மாருக பீஹார் மாகாண அரசாங்கத்துக்கு இந்தத்துகை கிடைக்குமானுல் பொது மக்களுக்கு நன்மைதரும் எத்தனையோ காரியங்களை செய்யமுடியும். ரஸ்தாக்கள் அமைக்கலாம். கால்வாய்கள் வெட்டலாம். ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தலாம். தந்தி, தபால் இலாகாவில் அபிவிருத்தி செய்யலாம். அணைகளைக்கட்டி ஜலத்லைதத் தேக்கலாம். கல்வி, போலீஸ் இலாகாக்களை விஸ்தரிக்கலாம். இன்னும் எத்தனையோ காரியங்கள் செய்யலாம். டாடா தொழிற்சாலையை சர்க்கார் எடுத்துக்கொள்வதால் சர்க்காருக்கு பத்துகோடி ரூபாய் வருமானம் அதிகரிக்கின்றது சர்க்கார் வருமானத்தை மக்கள் வருமானமாகத்தான் பாவிக்கவேண்டும்.

பாபு:—எல்லா தொழிற்சாலைகளையும் சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றீர்களா?

அன்வர்:—இல்லை. உடனடியாக எல்லா தொழில்களும் தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்று நாம் வற்புறுத்தவில்லை இரும்பு, நிலக்கரி, துணி, சணல், சர்க்கரை, சிமெண்ட், ரயில்வே கப்பல், காகிதம் போன்ற முக்கிய தொழில்களை முதலில் தேசிய மயமாக்கலாம். ரயில்வேயை சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறது. இதன்பலனை பிரத்யட்சமாக பார்க்கின்றீர்கள் அதன் வருமானம் பூராவும்ரயில்வே சிப்பந்திகள் நலனுக்கும், பிரயாணிகளின் வசதிக்கும், ரயில்வே விஸ்தரிப்புக்கும் செலவிடப்படுகின்றது. ரயில்வே தனி நபர்கள் கம்பெனிகளாக இருந்திருந்தால் இது சாத்தியமாயிருக்காது. வருமானம் முழுவதையும் ஒரு சில பங்குதாரர்கள் பங்குபோட்டுக் கொண்டிருப்பர்.

ராமு:— தொழில்கள் தேசீய மயமாக்கப்பட வேண்டுமென்பதற்கு இதுதான் காரணமா?

அன்வர்:— இல்லை. வேறு பல காரணங்களும் உண்டு அதில் முதலாளிகளின் போட்டா போட்டியும் ஒன்று. ஒரு தொழிலில் ஒருவன் லாபமடைவதைப் பார்த்ததும் மற்றவர்கள் அவனுக்கு போட்டி போட ஆரம்பித்துவிடுகின்றனர். அதனுல் தொழிற்சாலைகள் பெருகி குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் உற்பத்தி அவசியத்தை விட அதிகரித்து விடுகின்றது. மூலப்பொருள்கள் வீணுவதுடன் விற்பனையில்போட்டியும் தோன்றுகிறது. தேசத்திற்கு அவசியமான தொழில்களில் அதிகலாபம் இல்லாததால் அதில் கவனம் செலுத்தப்படுவதில்லை. முதலாளித்துவத்தால் இதைவிட மோசமான விளைவுகளும் ஏற்படுகின்றன. தங்களுடைய பண்டங்களின் விற்பனைக்காக முதலாளிகள் யுத்தத்தை தூண்டிவிடுகின்றனர். தேசத்தின்பெரிய பெரிய பத்திரிகைகள் அவர்களுடைய ஆதிக்கத்தில் இருக்கின்றன. தங்கள் இஷ்டம்போல் அவர்கள் காரியங்களை நடத்துகின்றனர். கடந்த மஹா யுத்தத்தைதூண்டியவர்கள் ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்காவிலுள்ள முதலாளிகளேயாவர். யுத்தத்தினுல் இந்திய முதலாளிகள் அடித்த கொள்ளையைநீங்கள் பார்த்தீர்கள். இன்றைக்கும் மூன்ருவது உலக யுத்தத்தின் நற்செய்தியைக்கேட்டு அவர்களுடைய வாயில் ஜலம் ஊறிக்கொண்டிருக்கிறது.

ராமு:—அடேயப்பா! பிரசங்கமே ஆரம்பித்துவிட்டீர்களே! இருக்கட்டும்! நிலம் சம்பந்தப்பட்டவரை உங்களுடைய திட்டம் என்ன?

அன்வர்:—நிலச்சுவான்தார் முறையை ஒழிக்கவே சோஷியலிஸம் விரும்புகின்றது. இடையிலுள்ள காரர்கள் அகற்றப்பட்டு கிஸான்கள் சர்க்காருடன் நேரடி தொடர்பு கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருஊரிலும் அல்லது பல கிராமங்களை ஒன்ருகச் சேர்த்து கூட்டுப் பண்ணைகள் அமைத்து நிலத்தில் உழைப்பவர்களுக்கு சரிசமமாக பங்குகொடுக்கப்பட வேண்டும். ஐக்கிய மாகாணத்திலுள்ள நிலச்சுவான்

தார்களின் வருமானம் ஐக்கியமாகாண சர்க்கார் வருமானத்தைவிட அதிகம் என்றுசொன்னல் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இவ்வளவு பெருந்தொகை ஐக்கிய மாகாணத்திலுள்ள ஒரு சில கவலையற்ற சுகவாசிகளின் ஆடம்பர வாழ்க்கைக்கு செலவிடப்படுகின்றது. இந்த முப்பது, நாற்பது கோடி ரூபாய் வருஷா வருஷம் நிலப் பண்பாடு, விவசாயத்துக்கு வேண்டிய சாதனங்களின் உற்பத்தி, நீர்ப்பாசன திட்டங்கள் அதற்கு அத்தியாவசியமான மின்சார உற்பத்தி போன்ற துறைகளிலும் பொதுவாக விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையிலும் செலவிடப்பட்டால் பத்து வருஷங்களுக்குள் இந்த நாடு ஸ்வர்க்கமாக விளங்கமுடியும்.

பாபு:—ரொம்ப சரி. காங்கிரஸால் இதைச் செய்யமுடியாதா ? சோஷியலிஸ்டுகள் தான் வேண்டுமா? பீஹாரிலும் ஐக்கிய மாகாணத்திலும் ஜமீந்தாரி முறையை காங்கிரஸ்தான் ஒழித்திருக்கிறது. முக்கியமான தொழில்களை தேசீய மயமாக்கும் யோஜனையும் நடந்துக் கொண்டிருக்கிறது. இதைவிட இன்னும் என்னதான் செய்யமுடியும்?

அன்வர்:—காங்கிரஸ் நம்மை சோஷியலிஸத்தின் வழியிலேயே அழைத்துச் செல்வதாக நீங்கள் நம்புகிறீர்கள். உண்மையில் அப்படியல்ல. இந்த வேலையைச் செய்வதற்கு வேண்டியதகுதி காங்கிரஸுக்கு இல்லை. காங்கிரஸில் எஞ்சியுள்ளவர்களுக்கு சோஷியலிஸத்தில் நம்பிக்கையுமில்லை. முதலாளித்துவத்தை ஒழிக்க அவர்களால் முடியாது.

பாபு:—உங்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்து விட்டால் உடனடியாக எல்லா தொழில்களையும் ஜமீந்தாரித்துவத்தையும் ஆக்ரமித்துக் கொள்வீர்களா ?

அன்வர் :—முடியாது. உடனடியாக அப்படிச் செய்யமாட்டோம். அதனல் பெரும் கொந்தளிப்பும் ஏற்படக்கூடும். ஆயினும் காங்கிரஸ் ஒரு திண்ணமான வழியை நிர்ணயித்திருக்கவேண்டும். நாட்டை எத்திசையில் அழைத்துச் செல்லப் போகின்றனர் என்பதை புதிய அரசியல் திட்டத்தில் தெளிவுபடுத்தியிருக்கவேண்டும்.

பாபு :— வரும் பொதுத் தேர்தல்களில் நீங்கள் வெளியிடப்போகும் தேர்தல் பிரகடனம் எதுவாக இருக்கும் ?

அன்வர் :— தேசத்தில் கிஸான்கள், தொழிலாளர்களின் ஆட்சி அமைத்தல், எல்லா விதமான தனிநபர் கொள்ளை லாபத்தையும் லஞ்சத்தையும் ஒழித்தல் பெரிய சம்பளங்களை குறைத்து நடுத்தரமான ஒரு சம்பள விகிதத்தை அமைத்தல் முதலிய பிரச்னைகளின் அடிப்படையில் பொதுமக்களிடம் ஓட்டுகளைக்கேட்போம்.

ராமு :— கம்யூனிஸ்டுகளும் இதைத்தானே சொல்லுகின்றனர். உங்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் என்ன வித்தியாசம் ?

அன்வர் :—நாம் நாட்டின்நலனையும், முன்னேற்றத்தையுமே குறிக்கோளாகக்கொண்டு உழைக்கின்றோம். கம்யூனிஸ்டுகள் தேசத்தின் நலனைப் புறக்கணித்து விட்டு ரஷ்ய உபதேசப்படி ஆடுகின்றனர். ரஷ்ய அன்னிய நாட்டு மந்திரியின் கொள்கையே உலகம் முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்டுகளின் கொள்கையாகும்.

ராமு :—ரஷ்யாவிடம் உங்களுக்கு என்கோபம்? ரஷ்யாவுடன் நல்லுறவை நீங்கள் விரும்பவில்லையா ?

அன்வர் :— நிச்சயமாக ரஷ்யாவுடன் நல்லுறவு கொள்ளவே விரும்புகிறோம். ரஷ்யாவிடம் நமக்கு எவ்வித கோபமுமில்லை. ஆயினும் நம் தேசத்தில் ரஷ்யர் தன்னுடைய ஐந்தாம்படை வைத்திருப்பதை நாம் சகித்துக்கொண்டிருக்க முடியாது. இந்தியாவின் ஐந்தாம்படையின்ரை ரஷ்யாவும் சகித்துக்கொண்டிருக்காது என்பது நிச்சயம்.

ராமு :—தேசப்பற்று என்பது சோஷியலிஸ்டுகளுக்கு மட்டும் ஏகபோக உரிமை? கம்யூனிஸ்டுகளுக்கு அது இல்லை? அப்படித்தானே.

அன்வர் :— கோபிப்பதில் பிரயோஜனமில்லை. கடந்தகாலத்தில் கம்யூனிஸ்டுகள் காட்டிய தேசபக்தியை மறந்திருக்கமாட்டீர்கள்: கடந்த மஹாயுத்தம் மூண்டவுடன் காங்கிரஸ் புரட்சிப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் விரும்பினர்கள். காங்கிரஸ் போராட்டத்திலிறங்காமலிருக்கவே காங்கிரஸை பிற்போக்காளன், கோழை என்றெல்லாம் அவர்கள் குறைகூறினர்கள். இதன் நடுவில் ரஷ்யா, ஜெர்மனிமீது போர்துடங்கி பிரிட்டனின் நேசநாடாக மாறியவுடன் திடீரென்று ஏகாதிபத்திய யுத்தம் மக்கள் யுத்தமாக மாறிவிட்டது. இந்தியாவில் புரட்சியோ, போராட்டமோ, வேலைநிறுத்தங்களோ செய்வது சரியல்லவென்று பிரசாரம் செய்தனர். 1939-ல் புரட்சிப் போராட்டத்தை ஆரம்பிக்கத் துடித்துக் கொண்டிருந்த அதே கம்யூனிஸ்டுகள் திடீரென்று சத்யாக்கிரஹத்துக்கும் போராட்டத்துக்கும் எதிரிகளாக மாறிவிட்டனர். 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் இறங்கியவர்களை ஐந்தாம் படையினரென்று குற்றஞ் சாட்டினர். போராட்டத்தில் கலந்துகொள்ளாதது மட்டுமின்றி சகல விதத்திலும் போராட்டத்தை முறியடிப்பதில் முனைந்தனர். பாபு சுபாஷ் சந்திரபோஸை பாஸிஸ்டுகளின் ஏஜண்டு என்றும் ஐந்தாம் படையைச் சேர்ந்தவரென்றும் குறை கூறினர். தேசத்தை அழிவுப் படுகுழி

யில் ஆழ்த்தும் முஸ்லிம் லீக் பிரிவினையை ஆதரித்த னர். நான்கு நீண்ட வருஷங்கள் வரை முஸ்லிம் லீகை ஆதரிப்பதைத்தவிர கம்யூனிஸ்டுகட்சிவேறொன் றும் செய்யவில்லையென்று சொல்லுவது மிகையா காது. முடிவில் தேசம் விடுதலையடைந்து சுதந்திர சர்க்கார் டில்லியில் அமைந்தது கம்யூனிஸ்டுகள் இந்திய சர்க்காரை குறை கூறும் தொழிலை மேற் கொண்டிருந்தனர். இன்று சாம்ராஜ்ய வாதி முத லாளித்வ வாதியென்று சொல்லி அமெரிக்காவை எதிர்க்கும் இதே கம்யூனிஸ்டுகள் நாளை ரஷ்ய அமெ ரிக்க உடன்பாடு ஏற்பட்டவுடன் அமெரிக்காவைப் புகழ ஆரம்பித்து விடுவரென்பதில் சந்தேகமில்லை. அவர்களுக்குச் சொந்தமாக ஒரு கொள்கையில்லை. ரஷ்யாவின் கொள்கையே அவர்களுடைய கொள்கை ரஷ்யாவே கம்யூனிஸ்டுகளின் தாயகம்.

பாபு:—உலகத்தில் சோஷியலிஸத்தை பரப்பவே ரஷ்யா முயற்சிக்கின்றது. எனவே ரஷ்ய செல்வாக்கு வளரும்நாடுகளில் சோஷியலிஸம் வெற்றியடையமுடி யும். நீங்கள் ரஷ்யாவை ஏன் எதிர்க்கவேண்டும்?

அன்வர்:- ரஷ்யா ரஷ்ய எல்லைகளுக்குள் சோஷிய லிஸத்தைத்தாங்கிநிற்கின்றது என்பது உண்மைதான். ஆயினும் அதன்வெளிநாட்டுகொள்கை பிரிட்டிஷ் அமெ ரிக்க கொள்கைக்கு எவ்விதத்திலும் மாறுபட்டதல்ல. ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு சுயநலமே குறிக்கோள். ஏகாதிபத்தியவாதமே அதன் போக்கு. இஸ்ரவேல் ராஜ்யத்தை அங்கீகரித்து பாலஸ்தீனப் பிரச்னையில் ரஷ்யாதன் சுய ரூபத்தைக்காட்டியிருக் கிறது பாலஸ்தீன அரபியர்கள் ஏழைகள் யூதர்கள் முதலாளிகள். இருப்பினும் ரஷ்யா அரபியர்களை ஆதரிக்க வில்லை. தோல்வியுற்ற அழிவுற்ற ஜெர் மனியை சுரண்டுவதில் ரஷ்யா மற்றவர்களுக்கு சளைத் துவிடவில்லை. துருக்கியிடமிருந்து டார்டனல்ஸை கோருவது எந்தப் பொதுவுடமைக்கொள்கையைச் சேர்ந்ததோ தெரியவில்லை. ஒருக்கால் ரஷ்யா இந்தியா வில்காலடி வைத்தாலும் கராச்சி துறைமுகத்தை அடைவதே அதன் பிரதான நோக்கமாக இருக்கலாம். நாம் சோஷியலிஸத்தை நிலை நாட்ட விரும்புகிறோம். ஆனால் சோஷியலிஸம் ரஷ்யாவின் ஏகபோக உரிமை யல்ல நம் நாட்டின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நம் வழியை நாமே நிர்ணயிப்போம். சோஷியலிஸத்தை அடைய ரஷ்ய ஆதிக்கம் அவசிய மாயின் அவ்வித சோஷியலிஸம் நமக்குத் தேவை யில்லை.

பாபு:— சோஷியலிஸ்டு, கம்யூனிஸ்டு பிரச்னையை விடுங்கள். அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பும் சோஷியலிஸ்டுகளால் இன்று அதிகாரத்தை ஏற்று நடத்தமுடியுமா?

அன்வர்:—முடியாது இன்றைய நிலைமையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவது சோஷியலிஸ்டுகளின் நோக்கமல்ல.

பாபு:—அப்படியானால் உங்கள் எதிர்கட்சியின் தன்மைதான் என்ன? அதிகார பீடத்தில் அமரவோ நீங்கள் தயாராக இல்லை. அதிகாரத்திலிருப்பவர் களை குறைகூறி தொந்தரவு கொடுக்கின்றீர்கள். முடிவாக உங்கள் நோக்கம் என்ன? எதிர்த்துக் குறைகூறிக் கொண்டிருப்பது என்றுதான் நோக்கமா?

அன்வர்:—இங்கிலாந்தில் எதிர்கட்சி செய்யும் வேலையையே இங்கு நாமும் செய்ய விரும்புகிறோம். அதாவது தேசீய சர்க்காரில் இருக்கும் குறைகளை நியாயமான முறையில் எடுத்துச் சொல்லி சர்க்கா ரைப்பலப்படுத்துவதும் புதிதாகக் கிடைத்த சுதந்தி ரத்தை காப்பாற்றுவதுமே நம் லட்சியம்.

ராமு:—அதெல்லாமிருக்கட்டும். நேரு சர்க் காரை சகல விதத்திலும் பலப்படுத்த வேண்டியது ஒவ்வொரு இந்தியனின் கடமை என்பதை ஒப் புக்கொள்ளுகின்றீர்களா?

அன்வர்:—சந்தேகமென்ன! பண்டித நேரு வுக்கு சர்க்காரில் கொஞ்சம் நிர்ப்பந்தமிருப்பதாக நாம் நினைத்த போதிலும் அவருடைய சர்க்காரை பலப்படுத்துவதே நம் நோக்கம்.

பாபு:—பேஷ்! நாம் ஒருவரையொருவர் நெருங் குகிறோம். நம்மிடையே அபிப்பிராய பேதம் குறைந்து வருகிறது இருக்கட்டும். இன்றைய நெருக்கடியான கட்டத்திலிருந்து நாட்டை முன் னேற்றிச் செல்ல நேரு சர்க்காரால் மட்டுமே முடியு மென்று நம்புவதாயிருந்தால் பலம் வாய்ந்த ஒரு கட்சி யின ஆதரவு இல்லாமல் நேரு சர்க்கார் வெற்றிகர மாக இயங்க முடியாதென்பதையும் ஒப்புக்கொண்டு தானாகவேண்டும். இன்று நாட்டில் பலம்வாய்ந்த கட்சி காங்கிரஸைத் தவிர வேறெதுவாக இருக்க முடியும்? எனவே காங்கிரஸை பலஹீனப்படுத்து வது நேரு சர்க்கா ரை பலஹீனப் படுத்துவதாகுமல் லவா?

அன்வர்:—உண் மைதான். ஆயி னும் ஸ்தாபனத் தின் கட்டுப்பாடு காங்கிரஸ்காரர்க ளாலேயே தகர்க் கப்பட்டு காங்கிரஸ் இன்று உருக்குலை ந்து வருவது உங்

Orjee's
Romit
Hair Oil
ORJEE PRODUCTS
VALANGAMAN. (S. INDIA.)

களுக்கே தெரியும் மத்தியமாகாணசர்க்கார்களிலுள்ள காங்கிரஸ்காரர்கள் நல்லதோ கெட்டதோ எப்படியோ தங்கள் வேலைகளை செய்து கொண்டு போகின்றனர். வெளியிலுள்ள காங்கிரஸ்காரர்களுக்கு சர்க்காரை பிரயோஜனப்படுத்திக் கொள்வதைத்தவிர வேறு வேலையில்லை அதுவும் சுயநலத்துக்காக. மேலும் சர்க்காரை காங்கிரஸ் நடத்துவதற்குப் பதிலாக இன்று சர்க்கார் காங்கிரஸை நடத்துகின்றது. ஆசார்ய கிருபளானியின் ராஜினமா ஒன்றே இதற்கு போதிய சான்றாகும்.

பாபு:—நீங்கள் குறைகூறுவது ஓரளவுக்கு உண்மையாயினும் காங்கிரஸை விட்டால் அதன் ஸ்தாபனத்தை பூர்த்தி செய்ய வேறு ஏதாவது ஸ்தாபனம் உண்டா என்பதுதான் பிரச்னை. உங்கள் சோஷியலிஸ்டு கட்சி அந்த ஸ்தானத்தை வகிக்குமா? ஒருக்காலும் முடியாது. காங்கிரஸ் பொதுஜன நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது. காங்கிரஸ் என்றால் ஒவ்வொரு குழந்தைக்கும் தெரியும். நாட்டின் முதல்தர மூளையுள்ளவர்கள் அதனிடம் இருக்கின்றனர். வேறு ஏதாவதொரு கட்சி இந்த நிலைமைக்கு உயர எத்தனையோ வருஷங்கள் பிடிக்கலாம். அதுவரை சுதந்திரத்தைப் பாதுகாத்து நேரு சர்க்காரை ஆதரிக்க ஒரு கட்சி வேண்டாமா? இன்றைய நிலைமையில் ஒவ்வொரு நிமிஷமும் அபாயம் ஏற்படலாம். அந்நிலையில் நாட்டை தட்டியெழுப்ப காங்கிரஸால் மட்டுமே முடியும் எனவே தற்சமயம் காங்கிரஸ் நிலைத்திருக்க வேண்டியது அத்யாவசியம்.

ராமு:—அப்படியானால் அடுத்த தேர்தலில் காங்கிரஸை தோற்கடித்து சோஷியலிஸ்டுகள் அதிகாரத்துக்கு வரவேண்டுமென்று சொல்லுகின்றீர்களா?

அன்வர்:—இன்று நிர்வாகத்தை ஏற்று நடத்துவதற்கு நமக்குப்போதிய சக்தியில்லை.

பாபு:—காங்கிரஸ் இருப்பதும் பிடிக்கவில்லை. நிர்வாகத்தை ஏற்று நடத்துவதற்குப் போதுமான சக்தியும்இல்லை என்கிறீர்கள். முடிவில் நீங்கள் என்னதான் செய்யப் போகின்றீர்கள்?

அன்வர்:—வரப்போகும் தேர்தலில் இல்லாவிடினும் அதற்கடுத்த தேர்தலில் நாம் அதிகாரத்தைக் கைப்பற்றியே தீருவோம்.

பாபு:—இதை நானும் ஒப்புக் கொள்கிறேன். இரண்டாவது பொதுத் தேர்தல்கள் நடப்பதற்கு இன்னும் ஏழெட்டு வருஷங்களாவது பிடிக்கும் அதுவரை அநேகமாய் காங்கிரஸும் நசித்துப்போய் அதிகார பீடத்திலிருந்து அகற்றப்பட வேண்டிய நிலைமைக்கு வந்துவிடும். அதற்குள் நாடும் பலமடைந்து காங்கிரஸ் இருக்கவேண்டிய அவசியமும் இல்லாமல் போய்விடலாம். அப்பொழுது புதிய உணர்ச்சியுடன் வேலைசெய்யும் புதிய ஆசாமிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைக்கலாம். (தொடரும்)

## அனாவசியமான கிளர்ச்சி

மத்திய ஐக்கிய முன்னேற்ற கமிட்டி மெம்பர் ஜனப் A M. அல்லாபிச்சை பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் அறிக்கை:—

“நம் பெரியார் தன்னுடைய சக்திகளை சிறந்த வகையில் நிர்மாணத் துறையில் உபயோகித்திருக்கலாம் ஹிந்துஸ்தானி எதிர்ப்புக் கிளர்ச்சி நம் மக்களுக்கு ஆத்திரமூட்டி அவர்களுடைய கவனத்தை வேறுபக்கம் திருப்புகின்றது. லீக் தலைவர்களுடன் நான் நீண்ட சம்பாஷணைகள் நடத்தினேன். ஹிந்துஸ்தானி எதிர்ப்புக்கிளர்ச்சியை அவர்கள் நிச்சயமாக ஆதரிக்கவில்லை. அனாவசியமான இக் கிளர்ச்சியில் எவ்வித சம்மந்தமும் கொள்ளவேண்டாமென்று தமிழ் நாட்டு முஸ்லிம்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். முஸ்லிம்கள் பேசும் பாஷைகளெல்லாம் முஸ்லிம்களின் பாஷைகளேயாகும் தமிழும் மலையாளமும், தெலுங்கும் கூட முஸ்லிம்களின் பாஷைகளே. ஏனெனில் லட்சக்கணக்கான முஸ்லிம்கள் அதைப் பேசுகின்றனர் உர்தூவும் ஹிந்துஸ்தானியும் கூட ஹிந்துக்களின் பாஷைகளாகும். ஏனெனில் கோடிக்கணக்கான ஹிந்துக்களும் அதைப் பேசுகின்றனர். இந்நிலையில் முஸ்லிம்கள் எந்த பாஷையையும் புறக்கணிக்க முடியாது இந்தியாவில் முஸ்லிம்கள் சாதித்த பெரிய சாதனைகளில் ஹிந்து முஸ்லிம்களை ஐக்கியப்படுத்தும் ஹிந்துஸ்தானி பாஷையை உற்பத்தி செய்ததும் ஒன்று. ஹிந்துஸ்தானி பாஷையை ஆதரிப்பதில் தங்களால் சாத்தியமான அனைத்தையும் செய்ய ஹிந்து முஸ்லிம்கள் கடமைப் பட்டிருக்கின்றனர் அன்னிய பாஷையான இங்கிலிஷ் பாஷையை நாம் படிக்கக்கூடுமென்றால் நம் தேசீய பாஷையான ஹிந்துஸ்தானியை ஏன் கற்றுக் கொள்ளக்கூடாது?


**Namath Watch Company,**

37-38, RATTAN BAZAAR,

P. T. MADRAS.



“எலிடா”

ரூபா 95/-

ரோல்டு கோல்டு $7\frac{3}{4}$ சைஸ் ஆப்டிக் கிளாஸ் கர்வட் ஷேப்.

ரோமர், பியர்பு, ரிக்கார்டு,

இன்னும் அநேக ரகங்கள் சப்ளை செய்யப்படும்

நேர்த்தியான லேடி கடியாரங்களும் கிடைக்கும்.

# வளரும் ஜனநாயகம் 3.

—:( தாரசு )—

வளரும் ஜனநாயகத்தின் லட்சியங்கள் முழுவதையும் கூறும் முன்பு ஜனநாயகச் சிந்தனைகளையும், அவைகள் தோன்றிய காரணங்களையும் நாம் அறிந்து கொள்ளவேண்டியதவசியம் ஜனநாயகத்தைப் பற்றி ஆதார பூர்வமாக தெரிந்து கொள்ளும்போது ஜனநாயகம் நிச்சயமாக வளர்ச்சியடையும் என்று ஹெர்பர்ட்ஸ்பென்ஸர் கூறியிருக்கிறார். கடந்தகால நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டுதான், புதிய பாதையை வகுக்க வேண்டுமென்று தியோடர்உல்ஸி கூறியிருக்கிறார். மனிதவர்க்கத்தின் சரித்திரமும், அரசியல் நிகழ்ச்சிகளும்தான் ஜனநாயகத்தை நிலை நிறுத்த வேண்டுமென்று நம் தேசத்து அறிவாளிகள் அடிக்கடிக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

மனிதவர்க்கமானது சரியானபடி முன்னேற முடியாமலும், இன்பமாக வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் செய்யும் முயற்சிகள் யாவும் பல காரணங்களால் பாதிக்கப்படுகின்றன. கலவரம் மிகுந்த அரசியல்சிந்தனையும், அதன்வழியாய் தோன்றுகின்ற கருத்துக்களும், அரசியல் ஸ்தாபனங்களும், மனித வாழ்க்கையில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. சமூகமாக சேர்ந்துவாழும் மனித வர்க்கத்தின் அடிப்படையான தேவைகளான சுதந்திரமும், ஜனநாயகமும் சரியான முறையில் நிர்ணயமாகாமல் செய்துவிட்டது காலத்தின் போக்கு; காலத்தின் போக்கை மாற்ற முடியாமல் போனதற்கு பலகாரணங்கள் இருக்கின்றன. அரசியல் ஸ்தாபனங்களின் முன்னேற்றமும், ஆதிபத்யமும் அதிகார மமதையும் நிலவும் நம்மிடையே சுதந்திரமும், ஜனநாயகமும் நாமறியாத முறையிலே சரியான பொருள் விளங்காத நிலையிலே இன்று வளர்ந்து வருகிறது. சுதந்திரம், ஜனநாயகம் இவைகளின் பொருளும் கருத்துக்களும் பழைய காலமுறையை ஒட்டியிருக்கவில்லை யென்பது உண்மையான விஷயம்.

இங்கிலாந்தில் நடந்த ஜனநாயக போராட்டம் 1688-ம் ஆண்டில் வெற்றி பெற்றது. பிரான்ஸ், வட அமெரிக்காவிலும் பதினெட்டாம் நூற்றாண்டிலும், சில தேசங்களில் கடந்த நூற்றாண்டிலும், சில இந்த நூற்றாண்டிலும் ஜனநாயக லட்சியத்தில் வெற்றியடைந்திருக்கிறது என்று சொல்லலாம். இந்த மூன்று நூற்றாண்டுகளுக்குள் உலகத்தின் போக்கே ஒரு விதமாக மாறியிருந்தபோதிலும், நிலைத்துநிற்கக்கூடிய அரசியல் முறைகளை இந்த ஜனநாயக தேசங்கள் இன்னும் தயாரிக்கவில்லையென்று கூறலாம். இதனால் தான் அடிக்கடி யுத்தங்கள் தோன்றுகின்றன. பண்டைய புலவர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய அரசியல் மேதைகளின் கருத்துகளில் இன்றைய அறிஞர்களின் திருஷ்டி விழவில்லை. மேலும் ஜனநாயகத்தைக் காப்பாற்ற இயற்கையின் சக்தி ஒன்று தனியாக வேலைசெய்கிறதென்று இன்றைய மனிதர்கள் சுகமாக உட்கார்ந்துகொண்டிருக்க முடியாது. முன்னேறவேண்டியது மனிதர்களின் கடமை, ஆனல் முன்னேற்றம் என்பது இயற்கையின் விதியென்று நினைக்கக்கூடாது "மனித சமூகத்தின வளர்ச்சியும், முன்னேற்றமும் எதிர்பார்க்கப்படும். நிகழ்ச்சிகளும் திடீரென்று தோன்றும் நிகழ்ச்சிகளும் ஒன்று சேர்ந்து உருவாகியது" என்று ஐரோப்பிய சரித்திர ஆசிரியர் பிஷர் என்பவர் கூறுகிறார். நமது நாட்டினரின் கருத்தும் இதுதான்.

உலகத்தில் தோன்றிய பெரிய யுத்தங்களும், அரசியல் குழப்பங்கள் மக்களின் சம்மதத்துடன் ஏற்பட்டது என்பதற்கு சரித்திரபூர்வமான ஆதாரங்களில்லையென்றாலும் பொருளாதார அமைப்பு சரியாக இல்லாததும் அதைமாற்றியமைக்க முயன்றபோது அடைந்த தோல்விகளும் யுத்தத்திற்கும், குழப்பங்களுக்கும் காரணமாக அமைந்துவிட்டது. வளரும்ஜனநாயகத்துக்கு மக்களின் சம்மதமும் அதையொட்டிய முறைகளும் தான் அவசியமாக இருக்கவேண்டுமென்று நிர்ணயிப்பதால் நமது நாட்டிலாவது சிறந்த லட்சியங்களுடன் கூடின பொருளாதார முறைகளை அமைக்க விரும்பும் சிந்தனை பெரிய தலைவர்களிடம் தோன்ற வேண்டும். புதிய, புதிய முறைகளும் திட்டங்களையும், நாம் அவைகளின் தன்மையை சரியாக உணராமல் வரவேற்க விரும்புவது ஜனநாயகத்துக்கு ஆபத்தை உண்டு பண்ணக்கூடியதாகும்.

பண்டைய கால முதல் நம் நாட்டில் சிறந்த ஆட்சிமுறையாகக் கருதி வந்த முடியாட்சியிலும் ஜனநாயக முறைகள் இருந்தனவென்று ஆராச்சியின் மூலமாக ஒப்புக்கொள்ள முடியும் இருந்த போதிலும் ஜனநாயகமானது உறுதியுடன் வளர்ச்சியடையவில்லை என்பது தெளிவான விஷயமாகும். பண்டைய அரசாங்கங்கள் ஜனப்பிரிதிநிதியைக்கொண்டு அரசை நடத்தாததுதான் அவைகள் முறிந்ததற்கு காரணமாகும். பண்டைய அரசியல் முறைகள், இன்றைய முறைகளைப்போலில்லாமல் தர்மத்தினல் நிர்ணயிக்கப்

பட்ட அரசாகவேயிருந்து வந்திருக்கிறது. மன்னர்கள் தத்துவ ரீதியாகவோ அல்லது நடைமுறையிலோ யதேச்சாதிகாரியாக இருக்கவில்லையென்று கூறலாம். ஒரு குறிப்பிட்ட குடும்பத்திலிருந்தோ அல்லது கூட்டத்தாரிலிருந்தோதான் அரசனை பொதுமக்கள் தேர்ந்தெடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. அரசனை நீக்கவோ அல்லது நியமிக்கவோ மக்களிடம் உரிமையிருந்திருக்கிறது. இம்மாதிரியான முறைகளெல்லாம் ஜனநாயக நீதியை யொட்டியிருந்தாலும் அதனை வளர்க்கும் சக்தியை அக்கால மக்கள் பெற்றிருக்கவில்லை போலும்! பண்டைய அரசியல் ஸ்தாபனங்களைப்பற்றி தொடர்ச்சியாகவோ அல்லது போதிய அளவுக்கோ அறிந்துகொள்ளத்தக்க ஆதாரங்கள் கிடையாது. சிதறுண்டு கிடக்கும் சிலவற்றிலிருந்து பார்க்கும்போது தற்கால பார்லிமெண்டரி முறையை ஓரளவு ஒத்ததாகவே அக்கால அரசாங்கம் நடைபெற்றிருக்கிறதென்று மட்டுமே தெரியவருகிறது. பொதுவாக ஆதிபத்ய அதிகாரம் மக்களிடமும், மன்னனிடமும் கலந்தேதானிருக்கிறது. ஆஸ்டின் இந்த வாதத்தை ஒப்புக்கொண்டுதான் ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கிறார்.

மன்னர்களின் ஆட்சி முறை எப்படி ஏற்பட்டதென்பதற்குத்தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. முதன் முதலில் அராஜகமாக இருந்ததாகவும் பிறகு மக்களிடையே ஒரு சமூக ஒப்பந்தம் (Social-Contract) செய்து கொண்டு ஒரு மன்னனை நியமித்து வரி வசூலிக்கவும், தண்டிப்பதற்கும் மக்களின் உரிமைகளை காப்பதற்கும் அரசனுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. பழையகால அரசியல் நூல்களும் நவீன அரசியல் சித்தாந்தங்களும் இவைகளை உறுதிப்படுத்துகின்றன. ஐரோப்பாவில் புரட்சிக்குக் காரணமாக அமைந்த இந்த முறை நம் நாட்டில் மன்னனை தெய்வீக உரிமையுள்ளவனாகச் செய்துவிட்டது. முஸ்லிம்களின் ஆட்சி ஏற்படும் வரையில் நமது தேசத்தில் அரசானது சில சமயங்களில் யதேச்சாதிகாரமாக இருந்தது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

சில சமயங்களில் தர்ம ரீதியாகவும் அரசு நடந்திருக்கும் விபரமும் தெரிய வருகிறது. தர்மத்தை அனுசரித்த ஆட்சியும் அதனால் மன்னர்களை தெய்வீக உரிமையுள்ளவர்களாகக் கருதப்பட்டதும், மதப் பிரிவினைகள் ஏற்பட்டதும் விசாலமான தேசத்தில் சில கிராமங்களிலும் சில நகரங்களிலும் மக்கள்சிதறிக்கிடந்ததும் ஜனநாயகத்தில்சிந்தனையைச் செலுத்தவோ அல்லது அதன் குணங்களை யறியவோ வசதியாக இருக்கவில்லை. அன்னியப்படையெடுப்புகளும் அடிக்கடி தோன்றிய உள்நாட்டுக்கலகங்களும் ஜனநாயகத்திற்கு எதிராகவே அமைந்து விட்டன. அர்த்த சாஸ்திரம் போன்ற நூல்கள் ஜனநாயக சிந்தனைகளுக்கு அதிக இடமில்லாமல் எழுதப்பட்டிருப்பதை நோக்கும்போது மன்னர்களின் ஆட்சி அழியாது என்று நினைத்திருக்கவேண்டும்! தர்மத்தை ஒட்டிய அரசு அன்னிய ஆட்சி வந்த பிறகு அடியோடு அழிந்துவிட்டது. சில சமஸ்தானங்கள் கூட தர்மத்தை விட்டு வெகுதூரம் விலகி விட்டன. இதனால் ஜனநாயக சிந்தனைகளுக்கு இடமில்லாமல் போயிற்று.

இன்றையதினம் நமது தேசத்தில் ஜனநாயகமானது ஒரு புதிய லட்சியமாகவேதான் கருதப்படுகிறது. அவ்விதமாக நினைப்பதில் தவறு இருப்பதாக நினைப்பதற்கில்லை. மேலும் இவ்விதமாக நினைப்பதில் பல சௌகர்யங்களுமிருக்கின்றன. அரசியலில் மதக் கோட்பாடுகள் அபாயம் நிறைந்த விஷயமானதால் அதில் அதிக கவனம் செலுத்தாமல் நியாயவாதத்தை அனுசரித்து முஸ்லிம், ஹிந்து நாஸ்திகர், ஆஸ்திகர் பகுத்தறிவாளர்கள் ஆகிய எல்லா வகுப்பினரும் ஒப்புக்கொள்ளக் கூடியதான அடிப்படையைக் கொண்ட ஜனநாயகம் ஏற்படவேண்டும். அதுதான் வளரும் ஜனநாயகமாகும்.

## காந்தீய சோஷியலிஸ்ட் ஊழியர் கழக ஆண்டு விழா

31—7—48 காலையில் மேற்படி கழக சார்பில் திரு G. R. நாகையர் தலைமையில் நூற்புப்போட்டியும் மாலையில் ஸ்ரீமான்கள் டாக்டர் R. மஹாலிங்கையர் 'ஆஸாத்' ஆசிரியர் அப்துல் அஸீம், ஹிந்துஸ்தானி பண்டிட் J. N ரங்கசாமி இவர்கள் முன்னிலையில் ஹிந்துஸ்தானி பிரசங்க போட்டியும் நடைபெற்றன.

மறுநாள் மாலை கழக சார்பில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு A. பழனிவேல் தலைமை வகித்தார். நெருக்கடியான இச்சமயத்தில் எல்லோரும் சர்க்காரை ஆதரிக்கும்படி சிதம்பரம் உப்பு பூவராகன் கேட்டுக் கொண்டார். சென்னை ஜனப் அஜ்மதுல்லா காந்தியடிகளின் சமதர்ம சித்தாந்தமே (சோஷியலிஸம்) உலகத்துக்கு சுபிட்சத்தை அளிக்குமென்றும் சோஷிய பேசும் உலகத்தில் காந்தீய சோஷியலிஸம் கற்களில் கோஹினூரைப் போன்றது என்றும் இந்தியர்கள் காந்தீய சோஷியலிஸத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தலைவரால் பரிசுகள் வழங்கப்பட்டன. RM. VR. நமசிவாயம் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது

M. அப்துல் சாத்தா,
காரியதரிசி.

## 'ஆஸாத்' அன்பரின் வேண்டுகோள்.

"பல விஷயங்கள் உங்களுக்கு பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் உண்மையில் அவை உங்களுக்கு நன்மை பயக்கக்கூடியனவாகவும் இருக்கும்" திரு குர்-ஆன்.

ஏராளமான நஷ்டத்தையும் சகித்துக்கொண்டு ஆஸாத் சேவை செய்துவருகின்றது. அதன் சேவை மஹத்தானது. எவ்வகுப்பினராயினும் இந்தியர்களாகிய ஒவ்வொருவரும் ஆஸாதின் சேவையை ஆதரிக்கவேண்டியதவசியம் வெள்ளையர்களும் அவர்களுடையஏஜண்டுகளும் சிருஷ்டித்துச் சென்ற சூழ்நிலையை சீக்கிரமே மாற்றி நாட்டின் அமைதி சமாதானத்தைக் காப்பாற்றி ஒற்றுமையை நிலைநாட்டி எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்த நிலைமையையும் சமாளிக்க இந்தியர்களை தயார்செய்யவேண்டிய முக்கியவேலை இன்னும் முடிவடையவில்லை.

தென்னாட்டில் ஆஸாதுக்கு தனிப்பட்ட முக்கியத்துவம் உண்டு. லீக் பிரசாரத்தின் விளைவாக பிரிந்திருந்த ஹிந்து முஸ்லிம் உள்ளங்களை ஆஸாதின் புரட்சிகரமான போக்கால் பிணைத்துவருகின்றது. நாட்டின் இரண்டு பெரிய சமூகங்களிடையே லீக் எழுப்பியிருந்த வெறுப்புக் கோட்டைகளை தகர்த்து தரைமட்டமாக்கி ஒற்றுமையின் புனிதமான உன்னத மாளிகையை ஆஸாத் நிர்மாணித்து வருகின்றது. மிஸ்டர் ஜின்னாவின் பொய் பிரசார வலையில் சிக்கியிருந்த முஸ்லிம்களை மீட்டு மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தலைமையின் கீழ் ஒன்றுதிரட்டும் வேலையை வெற்றிகரமாகச் செய்கின்றது. தென்னாட்டின் அமைதிக்கு ஆஸாத் அவசியம். அதன் வளர்ச்சிக்காக முயற்சிப்பது நம் கடமை. ஆஸாதுக்கு உதவுவதை தேசிய சேவையாகப் பாவித்து சாத்தியமான அளவுக்கு ஹிந்து சகோதரர்கள் உதவியிருக்கின்றனர். உதவிசெய்தும் வருகின்றனர். சென்னை மாகாண காங்கிரஸ் முஸ்லிம்களின் திலகமான ஹாஜி M. அப்துர்ரஹ்மான் சாஹிபைப்போன்ற ஒரு சிலரைத் தவிர ஆஸாத் போன்ற ஒரு பத்திரிகையின் அவசியத்தை முஸ்லிம் பொதுமக்கள் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை இம்மாதிரியான பொதுவேலைகளுக்கு ஒருசிலரின் ஆதரவுமட்டும் போதாது முஸ்லிம் சகோதரர்கள் ஆஸாதை ஆதரிக்க முன்வரவேண்டும் நாட்டுக்கும் குறிப்பாக முஸ்லிம்களுக்கும் தீங்கிழைக்கும் வகையில் வகுப்புப் பிரசாரம் செய்யும் பத்திரிகைகளை ஆதரிப்பதால் நாட்டிற்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ நன்மையில்லை. அவ்விதப் பிரசாரத்தின் பலன் அனுபவித்தாய்விட்டது. மாறுதலடைந்திருக்கும் சூழ்நிலையின் தன்மையை தெரிந்துகொண்டு ஆஸாத் போன்ற பத்திரிகையின் அவசியத்தை முஸ்லிம்கள் உணரவேண்டும். முடிவில் சாத்தியமான சகல துறைகளிலும் ஆஸாதை ஆதரிக்குமாறு ஹிந்து முஸ்லிம் சகோதரர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

K. M. ஷரீப்.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.